# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் 6

### தவணை 1

# மொடியூல் இல: 1, 2, 3

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
www.nie.ac.lk

**தரம் - 6**

தவணை 1

**மொடியூல் - 1**

தொடர்பாடல் திறன்

**மொடியூல் - 2**

தொழில்முறைப் படைப்புகள்

**மொடியூல் - 3**

இலக்கியச் சுவை

முதற்பதிப்பு - 2025

© தேசிய கல்வி நிறுவகம்

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

ISBN

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் www.nie.ac.lk

கல்வி அமைச்சினால்
இல.35/3, கேரகல வீதி,கந்துபொட, தெல்கொடையில்
அமைந்துள்ள சன்வின் தனியார் நிறுவனத்தில்
அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.
Published by : National Institute of Education
Printed by : Sanvin (Pvt) Ltd,
No.35/3, Keragala Road, Kanduboda, Delgoda.

## தேசிய கல்வி நிறுவகத்தின் செய்தி

# முன்னுரை

எமது நாட்டின் புதிய கலைத்திட்டம், மாறிவரும் உலக மற்றும் நாட்டில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேபோல் காலத்திற்குக்காலம் மாறிவருகின்ற உலகிற்குப் பொருத்தமான திறன்களை வளர்த்து, நிலைபேண்தகு அபிவிருத்திக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணக்கூடிய இயலுமையையும் மேற்கிழம்பச் செய்கின்றது. தற்போதைய கலைத்திட்டத்தில் புதுப்பித்தல்களையும் புதிய பாடங்களையும் அறிமுகப் படுத்துவதன் மூலம், கற்றல் - கற்பித்தல் செயல்முறையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இது அங்கீகரிக்கிறது. 2026ஆம் ஆண்டு முதல் நடைமுறை க்கு வரும் புதிய கலைத்திட்டத்திற்கு இணங்க, ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் அடிப்ப டையிலான மொடியூல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் இப்புதிய கலைத்திட்டமானது, 2026ஆம் ஆண்டு தரம் 01, தரம் 06 2027ஆம் ஆண்டு தரம் 02, தரம் 07 2028ஆம் ஆண்டு தரம் 03, தரம் 08 2029ஆம் ஆண்டு தரம் 04, தரம் 09 2030 ஆம் ஆண்டு தரம் 05 ஆகிய ஆரம்ப மற்றும் கனிஷ்ட இடை நிலைப் பிரிவுகளுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந்த மொடியூல் மாணவர்களுக் கான புதிய கற்றல் முறைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளதோடு இச்செயற் பாடுகளின் ஊடாக அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை ஆசிரியர் வழங்குவார். மேலும், இந்த மொடியூல்கள் சுய கற்றலுக்கு அவசியமான சூழலை உருவாக்குகின்றன. இவற்றின் ஊடாக மாணவர்கள் பாட உள்ளடக்கம் பற்றிய அறிவைப் பெறுவதோடு, பெற்ற அறிவைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார்கள் என நாங்கள் நம்புகிறோம். இக்கற்றற் சந்தர்ப்பங்கள் 21ஆம் நூற்றாண்டின் திறன்களான எழுத்தறிவு (Literacy) ஆளிடைத்தொடர்புத் திறன்கள், (Interpersonal skills) மற்றும் விழுமியங்கள் (Values) முதலியவற்றை வலுப்படுத்துவதற்கு பெரிதும் உதவும்.

ஒவ்வொரு மொடியூலிலும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களோடு, மாணவர்கள் தாங்கள் அடைந்த செயல்திறன் மற்றும் கல்வி இலக்குகளைச் சுயமாக மதிப்பிடுவதற்குத் தேவையான மதிப்பீட்டுக் கருவிகளும் வழங்கப் பட்டுள்ளன. புதிய திறன்களையும் அறிவையும் பிரயோகிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், யதார்த்தமான கற்றலுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை இம்மொடியூல்கள் வழங்குகின்றன.

இம்மொடியூல் அடிப்படையிலான கற்றல் முறையைத் தயாரிக்கும் முதன்மைப் பணிகளை மேற்கொண்ட, கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் உபாலி சேதர, தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்களான பேராசிரியர் சுனில் ஜயந்த நவரத்தின, பேராசிரியர் பிரசாத் சேதுங்க ஆகியோரின் அர்ப்பணிப்பான முன்னெடுப்பினை நாங்கள் கௌரவமாக மதிக்கின்றோம். மேலும், இம் மொடியூல்களைத் தயாரிப்பதில் பங்களித்த பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய பணியணியினர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் பல்வேறு துறைசார்ந்தோரின் உயர்மட்ட சேவையினையும் நாம் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கிறோம். இந்த மொடியூல்களைப் பயன்படுத்தும்போது நீங்கள் பெறும் அனுபவங்களும் ஆலோசனைகளும் எங்களுக்கு மிகவும் அவசியமானவை. எனவே, எதிர்கால மொடியூல் மேம்பாட்டிற்காக உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலாநிதி எஸ்.ஏ.டி. சமரவீர
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை.

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

| | |
|---|---|
| பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரன | பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம், மகரகம. |
| கலாநிதி தர்ஷன சமரவீர | பிரதிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள் மானிடவியல் மற்றும்<br>சமூக விஞ்ஞானங்கள் பீடம்<br>தேசிய கல்வி நிறுவகம், மகரகம. |

**வழிகாட்டலும் இணைப்பாக்கமும்**

| | |
|---|---|
| கலாநிதி முருகு தயாநிதி | பணிப்பாளர்<br>தமிழ்மொழித்துறை<br>தேசிய கல்வி நிறுவகம், மகரகம. |

**பதிப்பாசிரியர் குழு**

| | |
|---|---|
| பேராசிரியர் வ.மகேஸ்வரன் | வாழ்நாள் பேராசிரியர்<br>பேராதனைப் பல்கலைக்கழகம்<br>இலங்கை. |
| கலாநிதி க.இரகுபரன் | முதுநிலை விரிவுரையாளர்<br>தென்கிழக்குப் பல்கலைக்கழகம்<br>இலங்கை. |
| செ.சுந்தரலிங்கம் | பிரதிக்கல்விப் பணிப்பாளர்<br>தமிழ்மொழி அலகு<br>கல்வி அமைச்சு. |
| யு.எல்.உவைஸ் | பிரதிக்கல்வி வெளியீட்டு ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| சு.சேதுரத்தினம் | பிரதிக்கல்விப் பணிப்பாளர்<br>தேசிய பாடசாலைக்கிளை<br>கல்வி அமைச்சு. |
| க.விஜிதா | பிரதிக்கல்வி வெளியீட்டு ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**எழுத்தாளர் குழு**

**உள்வாரி**

| | |
|---|---|
| க.லோககீதா | உதவி விரிவுரையாளர்<br>தமிழ்மொழித்துறை<br>தேசிய கல்வி நிறுவகம், மகரகம. |

**வெளிவாரி**

| | |
|---|---|
| எஸ்.உதயசந்திரன் | பணிப்பாளர் (ஓய்வு)<br>தமிழ்மொழித்துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| பா.சுமன் | விரிவுரையாளர்<br>தமிழ் கற்கைகள் துறை<br>கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. |
| ரதி தேவசுந்தரம் | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம், கண்டி. |
| த.யுவராஜன் | உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)<br>வலயக் கல்விப் அலுவலகம்<br>மட்டக்களப்பு. |
| பா.மகாலிங்கசிவம் | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம். |
| பூ.வசந்தாரஞ்சனி | நு/பாரதி மகா வித்தியாலயம்<br>தலவாக்கலை. |
| ஆர்.சதாத் | வளவாளர்<br>வலயக் கல்வி அலுவலகம், கிண்ணியா. |

**மொழிப்பதிப்பாசிரியர்**

| | |
|---|---|
| பேராசிரியர் சி.சந்திரசேகரம் | தமிழ் கற்கைகள் துறை<br>கிழக்குப் பல்கலைக்கழகம்<br>இலங்கை. |

**சரவைநோக்கு**

| | |
|---|---|
| பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா | மொழிகள்துறை<br>தென்கிழக்குப் பல்கலைக்கழகம்<br>இலங்கை. |

**சித்திரங்கள்**

| | |
|---|---|
| எஸ்.பி.முரளி | ஆசிரியர் (ஓய்வு)<br>புசல்லாவ தமிழ் மகாவித்தியாலயம். |

**கணனி வடிவமைப்பு**

| | |
|---|---|
| இ.கவியாழினி | கணினி வடிவமைப்பாளர், கொழும்பு. |
| நா.பரமேஸ்வரி | வடிவமைப்பாளர்<br>தேசிய கல்வி நிறுவகம். |

**அட்டைப்பட வடிவமைப்பு**

| | |
|---|---|
| நா.சந்திரப்பிரியா | கணினி வடிவமைப்பாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| பி.டி.டி.லக்மால் | உதவி விரிவுரையாளர், திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுத்துறை, தேசிய கல்வி நிறுவகம். |

# அறிமுகம்

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அந்த நாட்டின் அறிவியல் முன்னெடுப்பில் மேலெழுகின்றது. அத்தகைய அறிவினை மேற்கிளம்பச் செய்வது மொழி. மொழிகளுள் தாய்மொழி தனிச்சிறப்பு வாய்ந்தது. அதன் ஆற்றல் அளப்பரியது. தாய்மொழி என்பது மொழியைக் கற்பது, மொழியில் அமைந்த இலக்கியங்களைக் கற்பது எனும் இருபகுதிகளைக் கொண்டுள்ளது. அது தகவல் பரிமாற்ற ஊடகமாக மட்டு மன்றி தகவல்களுக்குத் தோற்றுவாயாக அமையும் எண்ணங்களை உருவாக்குவதற்கும் உருவாக்கியதைத் தம்முள்ளும் பிறருள்ளும் பதிப்பதற்கும் பயனுடையதாகத் திகழ்கின்றது. பொதுநிலையில் மொழியைத் தம் சூழலில் கருத்துப் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தும் திறனை மாணவர் பெறுகின்றனர். அதற்கு அடிப்படைத்திறன்கள் அவசியமாகின்றன. இதனை அடைவதற்காகப் பல்வேறு செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவது அவசியமாகின்றன. இத்தகைய ஈடுபாட்டினால் அவர்களிடம் தேங்கியுள்ள பல்வேறு திறன்கள் மேலெழுகின்றன. அத்தகைய எழுச்சியினை முதன்மைப்படுத்த, கற்பித்தல் முறைகள் சிறப்பாக அமைதல் வேண்டும். கற்பித்தல் முறைகளை முறையாகத் தேர்ந்தெடுத்துக் கற்பித்தல், கற்றலை மேற்கொள்வதனால் வரையறுத்த நோக்கங்கள் அடையப்படுகின்றன.

அறிவியலும் தொழில்நுட்பமும் மிகுந்த இந்த உலகில் வெறும் உடற்பலம் அல்லது உழைப்பு மட்டுமே நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவமுடியாது. நாட்டின் நிலைபேறான அபிவிருத்தியினையும் சமாதானத்தினையும் மேம்படுத்தும் வகையில் பங்களிப்பினை வழங்கி வருகின்ற கல்வி, பல்வேறு திறன்களை மேலெழச் செய்கின்றது. மாணவர்களாகிய நீங்கள் ஏனைய பாடங்களைச் சிறப்புறப் பெறுவதற்கு தாய்மொழி அவசியமாகின்றது. அத்தகைய பாடங்களையும் சிறப்புறக் கற்று, நீங்கள் தங்கி வாழ்வது என்ற நிலையில் இருந்து விடுபட்டுத் தனக்கு மாத்திரமன்றி ஏனையவர்களுக்கும் பலமாக அமையக்கூடிய வகையில் ஆற்றலை வளர்த்துக்கொள்வதற்கு உங்களால் முடியும்.

அத்தகைய ஆற்றலை மேற்கிளம்பச் செய்யும் வகையில் தரம் 6 மொடியூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த மொடியூல்களை மாணவர்கள் செயற்பாட்டு அடிப் படையில் கற்பது அவசியமாகின்றது. குறிப்பாக ஒவ்வொரு விடயத்தையும் தர்க்க ரீதியாகவும் படைப்பாற்றல் ரீதியாகவும் அணுகவேண்டும். ஒவ்வொரு கற்றல் சந்தர்ப்பத்தினையும் முன் கொண்டு செல்லும் போது இயல்பான ஊக்கம் மேலெழுகின்றமையினை நீங்கள் உணர்ந்து கொள்ளமுடியும். இத்தகைய மாற்றம் உங்களைத் தொழில் உலகிற்கு அழைத்துச் செல்லும் என்பதனை உங்களால் உணர்ந்துகொள்ள முடியும். எனவே, மொடியூலினைக் கற்கும்போது கவனமும் ஆழமும் அவசியமானவை என்பதனைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

கலாநிதி முருகு தயாநிதி
பணிப்பாளர்
தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்.

## மொடியூல் - 1

பண்புடன் சுமுகமாக உரையாடவும் தொலைபேசி அழைப்பின் நோக்கத்திற்கேற்ப பண்புடன் உரையாடவும் தரப்படும் தலைப்புக்கேற்ப மேடைப் பேச்சினைப் பண்புடன், தெளிவுடன் அவையச்சமின்றி நிகழ்த்தவும் பல்லூடக முன்வைப்பினை இரு ஊடகங்களையேனும் பயன்படுத்தி முன்வைப்பதற்குமான ஆற்றலை வழங்குகின்றது.

## மொடியூல் - 2

வாழ்த்துமடல், அழைப்பிதழ் என்பவற்றின் பண்புகளை அறிந்து அழகான முறையிலும் பிழையின்றியும் ஆக்கபூர்வமாக அவற்றைத் தயாரிக்கவும் சுவரொட்டியில் காணப்பட வேண்டிய பண்புகளை அறிந்து அதைப் பிழையின்றியும் ஆக்கபூர்வமாகத் தயாரிக்கவும் ஒத்த கருத்துச் சொற்கள் தொடர்பாகக் கலந்துரையாடி அவை பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக் கொண்டு சொற்களஞ் சியத்தை விருத்திசெய்யவும் பொருத்தமான முறையிலும் விளக்கத்துடனும் பயன்படுத்தவும் ஆற்றலை வழங்குகின்றது.

## மொடியூல் - 3

திருக்குறளைப்பற்றி அறிந்து அதிலுள்ள அதிகாரங்களுள் ஒன்றான அன்புடைமை அதிகாரத்தைக் கற்றுத் துலங்கிச் செயற்படுத்துவதற்கும் கவிதைகளை இரசனையுடன் வாசிப்பதற்கும் கவிதை வெளிப்படுத்தும் விடயங்களை இனங்காண்பதற்கும் பயன்படுத்துவதற்கும் வெவ்வேறு வகையான நாட்டார் பாடல்களை வாசிப்பதற்கும் கருத்துக்கள் கூறுவதற்கும் கதையை வாசித்து, கதையின் பண்புகளையும் பயன்களையும் அறிவதற்கும் கருத்துக்களை முன்வைப்பதற்குமான ஆற்றல்களை வழங்குகின்றது.

## மொடியூலைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- மொடியூலை எப்பொழுதும் சுத்தமாக வைத்துப் பயன்படுத்த முயற்சி செய்யுங்கள்.

- தேவையின்றி மொடியூலில் குறிப்புக்கள் எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

- ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் முன்னதாக உங்களுக்கு வழங்கப் பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

- செயற்பாடுகளில் ஈடுபடும் வேளைகளில் உங்களது நண்பர்களுடன் ஒத்துழைத்துச் செயற்படுங்கள்.

- செயற்பாடுகளில் ஈடுபடும் வேளைகளிலும் விடைகளை மதிப்பீடு / கணிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களிலும் நேர்மையுடனும் நிதானத்துடனும் செயற்படுங்கள்.

- நீங்கள் பிரச்சினைகளை/இடர்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் ஆசிரியரிடம் வினாக்களை வினவுவதற்கும் மேலதிக அறிவுறுத்தல் களைப் பெறவும் தயங்கவேண்டாம்.

- வலைத்தள இணைப்புக்களை அணுகுவதற்காக இணையத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில், ஆசிரியரின் அறிவுறுத்தல்களைப் பெறுவதும் அவசியமாகின்றது.

## 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள்

தமிழ்மொழியும் இலக்கியமும் பிரதான பாடங்களில் ஒன்றாக அமைகின்றது. இப்பாடம் கேட்டல் / செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய திறன்களைக்கொண்டுள்ளது. இத்தகைய திறன்களைக் கொண்ட இந்த மொடியூலைக் கற்பதன் ஊடாக, நீங்கள் பின்வரும் திறன்களை அடைந்துகொள்ள முடியும்.

1. பகுத்து நோக்கும் சிந்தனை (Critical Thinking)
2. ஆக்கத்திறன் (Creativity)
3. உடனுழைத்தல் (Collaboration)
4. தொடர்பாடல் (Communication)
5. தகவல்சார் எழுத்தறிவு (Information Literacy)
6. தொடர்பூடக எழுத்தறிவு (Media Literacy)
7. தொழினுட்பம்சார் எழுத்தறிவு (Technology Literacy)
8. நெகிழ்வுத்தன்மை (Flexibility)
9. தலைமைத்துவமேற்றல் திறன்கள் (Leadership Skills)
10. தான்தொடங்காற்றல் (Initiative)
11. உற்பத்தித்திறன் (Producitivity)
12. சமூகத்திறன்கள் (Social Skills)

# பொருளடக்கம்


| மொடியூல் 01 - தொடர்பாடல் திறன் | | பக்கம் |
|---|---|---|
| 1 | சுமுகமான உரையாடல் | 1 |
| 2 | தொலைபேசி உரையாடல் | 7 |
| 3 | தலைப்புக்கேற்ப பேசுதல் | 13 |
| 4 | பல்வகை ஊடக முன்வைப்பு | 19 |
| **மொடியூல் 02 - தொழில்முறைப் படைப்புகள்** | | |
| 1 | வாழ்த்துமடல் தயாரிப்போம் | 29 |
| 2 | அழைப்பிதழ் தயாரிப்போம் | 36 |
| 3 | சுவரொட்டி தயாரிப்போம் | 43 |
| 4 | ஒத்தகருத்துச் சொற்கள் | 49 |
| 5 | கலைச்சொற்கள் | 53 |
| **மொடியூல் 03 - இலக்கியச்சுவை** | | |
| 1 | திருக்குறள் | 58 |
| 2 | கவிதை | 66 |
| 3 | நாட்டார்பாடல்கள் | 73 |
| 4 | வரிக்குதிரையின் கதை | 80 |

# மொடியூல் 1

# தொடர்பாடல் திறன்

### கற்றல் சந்தர்ப்பங்கள்

### சுமுகமான உரையாடல்

இக்கற்றல் சந்தர்ப்பம் பண்புடனும் மரியாதையுடனும் சுமுகமான உரையாடலைச் செவிமடுக்கவும் பதிலளிக்கவும் ஏனையோரின் தராதரத்திற்கு ஏற்ப விளிப்புச் சொற்களைப் பயன்படுத்தி தொடர்ச் சியாகப் பண்பாக உரையாடல்களில் ஈடுபடவைக்கும் ஆற்றலை வழங்கும்.

### தொலைபேசி உரையாடல்

இக்கற்றல் சந்தர்ப்பம் தொலைபேசி உரையாடலில் ஈடுபடும் போது அழைப்பினை ஏற்படுத்துபவரும் அழைப்பினை ஏற்பவரும் கவனத் திற்கொள்ளவேண்டிய விடயங்களை அறிந்து, சரியான முறையில் தொலைபேசி உரையாடலில் ஈடுபடுவதற்கு வேண்டிய திறனை வழங்கும்.

### தலைப்புக்கேற்ப பேசுதல்

இக்கற்றல் சந்தர்ப்பம், மேடைப்பேச்சுக்காகத் தரப்படும் தலைப்புக்கு ஏற்ப, பண்புடனும் தெளிவுடனும் அவையச்சமின்றியும் மேடைப்பேச்சைப் பேசக்கூடிய ஆற்றலை வழங்கும்.

### பல்வகை ஊடக முன்வைப்பு

இக்கற்றல் சந்தர்ப்பம், பல்வகை ஊடகங்களை அறிந்து, அவை ஒவ்வொன்றிலும் இருக்கவேண்டிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமானமுறையில் இரு ஊடகங்களையேனும் பயன்படுத்தி முன்வைப்புச் செய்யும் ஆற்றலை வழங்கும்.

கற்றல் சந்தர்ப்பம் 1

# சுமுகமான உரையாடல்

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இந்தக் கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,

- சுமுகமான உரையாடல் ஒன்றில் கலந்துகொள்ளவும்
- உங்களோடு உரையாடுபவரைப் பொருத்தமான சொற்களால் விளிக்கவும்
- அவருடைய கருத்துக்களை அவதானத்துடன் செவிமடுக்கவும்
- அவரின் வினாக்கள், கருத்துக்களுக்குப் பொருத்தமாகப் பதிலளிக்கவும்






## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

**அன்பான பிள்ளைகளே,**

நீங்கள் உரையாடலில் ஈடுபட்டும் இருப்பீர்கள் அல்லவா? அவை



### உரையாடலைச் செவிமடுக்கும் போது நாம் செய்யவேண்டிய விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுவோம்

- ........................................................................................................
- ........................................................................................................
- ........................................................................................................

### இவற்றைப் பற்றியும் சிந்தித்துக் கருத்துக்களை முன்வைப்போம்

- மனதை ஒருநிலைப்படுத்தி நன்றாகக் கேட்பது.
- செவிமடுக்கும் போது வேறு வேலைகளில் ஈடுபடாதிருப்பது.
- வேறு சத்தங்கள் உங்களுக்கு இடையூறு என்பதை நினைவிற் கொள்வது.
- மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாதிருப்பது.
- சுயநினைவுடன் அவதானமாகக் கேட்பது.
- முக்கியமான விடயங்களைக் குறிப்பெழுதி வைத்துக்கொள்வது.
- ஒழுங்குமுறைபற்றியும் நினைவில்கொள்வது.
- விடயங்களை நன்கு நினைவில் வைத்துக்கொள்வது.

## சுகாதாரப் பழக்கவழக்கங்கள்

அம்மா : கண்ணா, எழும்பு ராஜா. இன்னும் என்ன தூக்கம் இப்பவே மணி ஆறு ஆகின்றது.

மகன் : இப்போ ஆறு மணிதானே அம்மா, இன்னும் கொஞ்ச நேரம் தூங்குகிறேனே!

அம்மா : பல் துலக்கி முகம் கழுவ வேண்டாமா? பாடசாலைக்கு போக வேண்டும் அல்லவா?

மகன் : முதலில் கோப்பி கொடுங்கள். கோப்பி குடித்த பின்னர்தான் எழும்புவேன்.

அம்மா : முதலில் பல்துலக்காவிட்டால் வாயிலுள்ள கிருமிகள் எல்லாம் கோப்பியோடு வயிற்றுக்குள் சென்று நோய்களை உருவாக்கும். அத்துடன் பல்லையும் பழுதாக்கிவிடும். ஆகவே, காலையில் எழுந்தவுடன் முதலில் பல் துலக்க வேண்டும்.

மகன் : கோப்பி

அம்மா : இல்லை. பல் துலக்கிய பிறகுதான் கோப்பி. எப்போதும் அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்ப வேண்டும். காலைக் கடன்களை முடித்து, பல்துலக்கி, முகம் கழுவிய பின்னர் தான் ஏதேனும் அருந்த வேண்டும்.

மகன் : எதற்காக அம்மா? காலைக்கடன்களைக் காலையில் முடிக்க வேண்டும்? எப்போது எமக்குத் தோன்றுகின்றதோ அந்த நேரம் முடித்தால் போதாதா?

அம்மா : இல்லை மகனே, அது தவறு. நாள் முழுவதும் நாங்கள் உண்ட உணவு அனைத்தும் ஜீரணமாகி அதன் கழிவுகள் உரிய நேரத்தில் வெளியேறவில்லை என்றால் அது எமது உடலுக்குத் தீங்கையும் எம்மைச் சூழ உள்ளவர்களுக்கு அசௌகரி யத்தையும் கொடுக்கும்.

மகன் : நன்றாகப் புரிந்து கொண்டேன் அம்மா. இனி ஒருபோதும் காலைக் கடன்களைமுடிக்காமல் எந்தவொரு உணவையும் உட்கொள்ளமாட்டேன்.

## செயற்பாடு 1.1.1

மாணவர்களே! மேலே தரப்பட்டுள்ள உரையாடலைக் கவனத்தில் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை கூறுங்கள்.

1. இந்த உரையாடலில் பங்குபற்றியோர் யாவர்?
2. இந்த உரையாடல் எதைப்பற்றியதாக அமைந்திருந்தது?
3. உரையாடலில் கூறப்பட்ட விடயங்கள்பற்றிய உங்கள் கருத்து என்ன?

## செயற்பாடு 1.1.2

- மாணவர்களே! இருவர் இருவராக இணைந்து கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்ட தலைப்புக்கு ஏற்ப கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- விடயம் தொடர்பாக உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் வழிகாட்டலைப் பெறுங்கள்.

### குழு 1

♦ பாடசாலையில் சேர்கின்ற குப்பைகளை, முறையாக அகற்றுவது தொடர்பில் வகுப்புத் தலைவருக்கும் வகுப்பாசிரியருக்கும் இடையில் இடம்பெறும் உரையாடல்.

### குழு 2

♦ மின்சாரத்தை முறையாகப் பயன்படுத்துதல் தொடர்பாக மாணவர் இருவருக்கு இடையிலான உரையாடல்.

### குழு 3

♦ பாடசாலையில் பூந்தோட்டம் அமைத்தல் தொடர்பாக அதிபருக்கும் மாணவ தலைவருக்கும் இடையிலான உரையாடல்.

### குழு 4

♦ கிருமித்தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வது தொடர்பாக சுகாதார சேவை உத்தியோகத்தர் ஒருவருக்கும் அதிபருக்கும் இடையிலான உரையாடல்.

### குழு 5

♦ வீட்டுத்தோட்டம் அமைப்பது தொடர்பாக தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையிலான உரையாடல்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு, பொருத்தமான இணையத்தளங்களைப் பயன்படுத்த முடியும்.

- மாதிரி உரையாடல்களை இணையத்தளங்களிலிருந்து தரவிறக்கம் செய்யுங்கள். அவற்றைச் செவிமடுங்கள். தேவைப்படின், ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## மாணவர் சுயகணிப்பீடு

பொருத்தமான கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. உரையாடலில் ஈடுபடுவோரை இனங்கண்டு கூறமுடியும். | | | | |
| 2. உரையாடலில் பேசப்படும் விடயங்களைச் செவிமடுத்து அந்த உரையாடல் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கமுடியும். | | | | |
| 3. உரையாடல் ஒன்றில் ஈடுபடும் போது சூழல் கெடாதவாறு பார்த்துக்கொள்ள முடியும். | | | | |
| 4. குழுச்செயற்பாட்டின் போது எனது பங்களிப்பை முழுமையாக வழங்கமுடியும். | | | | |
| 5. கருத்துக்களைச் சுயமாகவும் பொருத்தமாகவும் முன்வைக்கமுடியும். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 2

# தொலைபேசி உரையாடல்

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,
- தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்துபவரும் ஏற்பவரும் கவனிக்கவேண்டிய அம்சங்களை விளக்கவும்
- பொருத்தமான முறையில் உரையாடவும் உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுங்கள்

- ♦ நீங்கள் தொலைபேசியில் உரையாடுவதுண்டா?
- ♦ யார் யாரோடு உரையாடினீர்கள்?
- ♦ யாரோடு மேற்கொண்ட உரையாடல் உங்களால் மறக்க முடியாததாக உள்ளது?
- ♦ அதனை மறக்க முடியாமைக்கான காரணம் என்ன?



நாம் அன்றாட வாழ்வில் பல்வேறு தேவைகளுக்காகத் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்துகிறோம், பலர் எங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்துகிறார்கள்.

தொலைபேசி உரையாடலுக்கு அழைப்பினை ஏற்படுத்துபவர், அழைப்பினை ஏற்பவர் என இரு தரப்பினர் அவசியம். இந்த இரு தரப்பினரும் கவனம் செலுத்தவேண்டிய விடயங்கள் பல உள்ளன.



தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்துபவர் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள்:

- பண்புடன் விளித்தல்
- முதலில் தன்னை அறிமுகப்படுத்துதல்
- அழைப்பினைத் தொடர்வதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல்
- பண்புடன் பேசுதல்
- அழைப்பின் நோக்கத்தைச் சுருக்கமாகக் கூறுதல்
- அவசியமானவற்றை மாத்திரம் கதைத்தல்
- பண்புடன் நன்றி தெரிவித்து, உரையாடலை நிறைவுசெய்தல்

தொலைபேசி அழைப்பினை ஏற்பவர் கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள்:

- முடியுமானவரை விரைவாக அழைப்பினை ஏற்றல்
- பண்புடன் விளித்தல்
- அவதானமாகச் செவிமடுத்தல்
- அழைப்பின் நோக்கத்தைக் கேட்டறிந்து, பொருத்தமாகத் துலங்குதல்
- பண்புடன் நன்றி தெரிவித்து, உரையாடலை நிறைவுசெய்தல்

## மாதிரித் தொலைபேசி உரையாடல்

அமுதன் : வணக்கம் இனியாள், நான் அமுதன் கதைக்கிறேன். எப்படி இருக்கிறீர்கள்?

இனியாள் : வணக்கம் அமுதன், நான் நலமாயிருக்கிறேன். நீங்கள் எப்படி?

அமுதன் : நானும் நலமாயிருக்கிறேன். நீங்கள் சென்று வந்த கல்விச் சுற்றுலா எவ்வாறு அமைந்தது என்பது பற்றி அறிவதற்குத்தான் அழைப்பினை எடுத்தேன். இப்போது அதுபற்றிப் பேச அவகாசம் உள்ளதா?

இனியாள் : ஆம், பேசலாம். அந்தச் சுற்றுலா மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. மகிழ்ச்சியையும் தந்தது.

அமுதன் : எங்கெங்கே போனீர்கள் என்று கூறமுடியுமா?

இனியாள் : நாங்கள் பேராதனை தாவரவியல் பூங்கா, பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களுக்குச் சென்றதோடு துன்ஹிந்த நீர்வீழ்ச்சியையும் கண்டுகளித்தோம்.

அமுதன் : பல்கலைக்கழகத்திற்கும் சென்றீர்களா? நான் அங்கு சென்று படிக்க வேண்டும் என்பது அம்மாவின் ஆசை.

இனியாள் : ஆம், அங்கு பொறியியல் பீடம், கலைப்பீடம், மருத்துவ பீடம் என்பனவற்றை எங்கள் ஆசிரியர்கள் சுற்றிக்காட்டினார்கள்.

அமுதன் : நல்ல சந்தர்ப்பம் இனியாள், அந்த நாள் வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாக உங்களுக்கு அமைந்திருக்கும்.

இனியாள் : உண்மைதான், தாவரவியல் பூங்காவிலும் மிகவும் அரிதான தாவரங்களைக் காண்பதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது.

அமுதன் : நல்லது இனியாள். நானும் எமது வகுப்பாசிரியரிடம் எம்மையும் ஒரு கல்விச்சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்க வேண்டும்.

இனியாள் : ஆம். அது உங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும்.

அமுதன் : ஆம்... நிச்சயமாக. சரி இனியாள், வீட்டுப்பாடங்கள் நிறைய உள்ளன. வாய்ப்புக் கிடைக்கும் போது பேசுவோம் நன்றி.

இனியாள் : நன்றி அமுதன்...

செயற்பாடு 1.2.1

உரையாடலை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுவோம்.

1. இந்தத் தொலைபேசி உரையாடலில் அழைப்பை ஏற்படுத்தியவர் யார்? அழைப்பை ஏற்றுக்கொண்டவர் யார்?
2. அழைப்பை ஏற்படுத்தியவர் எவ்வாறு உரையாடலை ஆரம்பித்-தார்?
3. தொலைபேசி உரையாடலின் போது நீங்கள் செவிமடுத்த பண்பான சொற்றொடர்கள் இரண்டினைக் கூறுங்கள்.
4. இந்தத் தொலைபேசி உரையாடல் எது பற்றியதாக அமைந்தது?
5. தொலைபேசி உரையாடலில் இடம்பெற்ற இடங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
6. தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியவர் உரையாடலை நிறைவு செய்வதற்குக் கூறிய காரணம் யாது?
7. இத்தொலைபேசி உரையாடலின்மூலம் நீங்கள் புதிதாக அறிந்து கொண்ட சொற்கள் இரண்டினைக் கூறுங்கள்.
8. இந்தத் தொலைபேசி உரையாடல் எவ்வாறு நிறைவு செய்யப்பட்டது?

செயற்பாடு 1.2.2

- நாம் இருவர் இருவராகச் சோடி சேர்வோம்.
- தொலைபேசி உரையாடலுக்காக நீங்கள் விரும்பிய விடயம் ஒன்றினைத் தெரிவுசெய்துகொள்ளுங்கள். (இதற்காக ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.)
- ஒவ்வொரு சோடியும் இரண்டு நிமிடங்களிலான தொலைபேசி உரையாடல் ஒன்றுக்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- தொலைபேசி உரையாடல் தொடர்பாக கற்றவற்றை மனத்திற் கொண்டு ஆயத்தம் செய்த விடயங்களைப் பொருத்தமான முறையில் உரையாடிக் காட்டுங்கள்.
- ஒவ்வொரு சோடியும் மேற்படி செயற்பாட்டில் ஈடுபடுவதனூடாக தொலைபேசி உரையாடல் தொடர்பான சிறந்த அனுபவம் ஒன்றினைப் பெறமுடியும்.

**எங்கள் ஆற்றலை நாங்களே அறிந்துகொள்வோம்.**

அழைப்பை ஏற்படுத்தியவர்:

நாம் பெற்றுக்கொண்ட ஆற்றல்களுக்கு ஏற்ப, எதிரே உள்ள கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுவோம்.

| தொலைபேசி உரையாடலுக்கான விடயம் ............................................................... | ★★★★ | ★★★ | ★★ | ★ |
|---|---|---|---|---|
| 1. அழைப்பினை ஏற்படுத்தியதும் என்னை அறிமுகப்படுத்தினேன். | | | | |
| 2. உரையாடலைத் தொடர்வதற்கு அனுமதியைப் பெற்றேன். | | | | |
| 3. பண்புடன் உரையாடலை மேற்கொண்டேன். | | | | |
| 4. அவசியமான தகவல்களை மட்டும் குறுகிய நேரத்துக்குள் பரிமாறிக்கொண்டேன். | | | | |

## அழைப்பைப் பெறுபவர்

நாம் பெற்றுக்கொண்ட ஆற்றல்களுக்கு ஏற்ப, எதிரே உள்ள கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுவோம்.

| தொலைபேசி உரையாடலுக்கான விடயம் ........................................................... | ★★★★ | ★★★ | ★★ | ★ |
|---|---|---|---|---|
| 1. அழைப்பினை ஏற்றதும் அழைத்தவரின் நலன்பற்றி விசாரித்தேன். | | | | |
| 2. உரையாடலைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு சம்மதம் கேட்ட போது, அதற்குச் சம்மதம் தெரிவித்தேன். | | | | |
| 3. பண்புடன் உரையாடலை மேற்கொண்டேன். | | | | |
| 4. கேட்ட தகவல்களைப் பண்போடு வழங்கினேன். | | | | |

## மாணவர் சுயகணிப்பீடு

பொருத்தமான கட்டத்துள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. தொலைபேசி உரையாடலை எவ்வாறு மேற்கொள்வது என்பதனை அறிந்துகொள்ள முடியும். | | | | |
| 2. தொலைபேசி உரையாடல் ஒன்றினை உருவாக்க முடியும். | | | | |
| 3. தொலைபேசி அழைப்பை ஏற்று உரையாடலைத் தொடரமுடியும். | | | | |
| 4. பண்புடனும் பொறுப்புடனும் உரையாடி, திருப்திகரமாக அதனை நிறைவுசெய்ய முடியும். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 3

# தலைப்புக்கேற்ப பேசுதல்

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக, தரப்படும் தலைப்புக்கேற்ப,
- பண்பாகவும்
- தெளிவாகவும்
- நிதானமாகவும்
- அவை அஞ்சாமையுடனும்
- நேரக்கட்டுப்பாட்டுடனும் மேடைப்பேச்சினை நிகழ்த்தும்

ஆற்றலைப் பெற்றுக்கொள்ள உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

அன்பான மாணவர்களே!

யாராவது ஒருவருடைய பேச்சினைக் கேட்டிருக்கிறீர்களா?

மேடைப்பேச்சின் இயல்புகளை உங்களால் உணர்ந்துகொள்ள முடிகிறதா?

குறித்த ஒரு தலைப்பில் பேசுவதற்கு உங்களால் ஆயத்தம் செய்ய முடியுமா?

உங்களால் இப்போது மேடையில் துணிவோடு பேசமுடியுமா?

செயற்பாடு 1.3.1



## செவிமடுத்துப் பேசுவோம்

பல்வேறு தலைப்புகளில் பேசப்பட்ட மேடைப்பேச்சுக்களை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இன்றும் நீங்கள் (ஆசிரியரின் உதவியுடன் தரவிறக்கம் செய்யப்பட்ட) பொருத்தமான மேடைப்பேச்சு ஒன்றினை செவிமடுக்கப் போகிறீர்கள். பிறருக்கு இடையூறின்றி மிகுந்த அவதானத்துடன் இந்த மேடைப்பேச்சினைச் செவிமடுங்கள்.

பொருத்தமான மேடைப் பேச்சு ஒன்றினை ஆசிரியரின் உதவியுடன் தரவிறக்கம் செய்து செவிமடுங்கள்.

பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுங்கள்.

1. இந்த மேடைப்பேச்சு எதைப்பற்றியது?
2. இந்த மேடைப்பேச்சு எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது?
3. இந்த மேடைப்பேச்சு எவ்வாறு நிறைவுசெய்யப்பட்டது?
4. இந்த மேடைப்பேச்சினை செவிமடுத்ததனால் நீங்கள் கற்றுக் கொண்ட மேடைப்பேச்சு நுட்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. இந்த மேடைப்பேச்சு உங்களைக் கவர்ந்ததா? கவர்ந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் கூறுங்கள்.

## நமது ஆற்றலை நாமே அறிந்துகொள்வோம்

நீங்கள் பெற்றுக்கொண்ட ஆற்றல்களுக்கு எதிரே உள்ள நட்சத்திரங்களுக்கு நிறம் தீட்டுங்கள்.

| | |
|---|---|
| 1. செவிமடுத்த பேச்சு எதனைப் பற்றியது என்பதை அறிந்து கூறமுடியும். | ☆ |
| 2. பேச்சு ஆரம்பிக்கப்படும் விதம், நிறைவு செய்யப்படும் விதம் என்பவற்றை அறிந்து கூறமுடியும். | ☆ |

செயற்பாடு 1.3.2

## பேச்சுக்கான சட்டகங்கள் சிலவற்றை அறிந்துகொள்வோம்

தரப்படும் ஒரு தலைப்புக்கேற்ப பேசும் போது, முன்னாயத்தமாக ஒரு சட்டகத்தை அமைத்துக்கொள்வது சிறந்த பேச்சொன்றினை முன்வைக்க உதவும்.

**சுற்றாடலைப் பாதுகாப்போம்**

- ஆக்கபூர்வமான ஆரம்பம் (சூழல் பற்றி அமைந்த கவிதை / பாட லொன்று, கற்றறிந்த தொடர்கள்)
- சூழலைப்பற்றி அறிமுகப் படுத்தல்
- சூழலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் பயன்கள்
- சூழல் மாசடையும் விதம்
- சூழல் மாசடைவதைத் தடுப் பதற்கு செய்ய வேண்டியவை
- நிறைவு செய்தல்

**சுவாமி விபுலாநந்த அடிகள்**

- சுவாமி விபுலானந்தரது படைப்பில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு சிறு பகுதி அல்லது அவரைப் பற்றி ஏனைய பெரியோர்கள் கூறிய தகவல்களை அடிப்படையாகக் கொண்ட ஆக்கபூர்வமான ஆரம்பம்
- அவரது வாழ்க்கைக் குறிப்புகள்
- அவரது கல்வி, சமூகத் தொண்டுகள்
- அவரது வாழ்விலிருந்து எமக்குக் கிடைத்த படிப்பினைகள்
- நிறைவு செய்தல்

### எனக்குப் பிடித்த படைப்பாளி

- அந்தப் படைப்பாளி தொடர்பான சுவாரசியமான தகவலைக் கொண்ட ஓர் ஆரம்பம்
- அவரது வாழ்க்கைத் தகவல்கள்
- அவரது படைப்புகள்
- அந்தப் படைப்பாளியை விரும்புவதற்கான காரணங்கள்
- அவரிடமிருந்து எமது வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய முன் மாதிரிகள்
- நிறைவு செய்தல்

### விழுமியங்களைக் கடைப்பிடிப்போம்

- ஆக்கபூர்வமான ஆரம்பம் (கவிதை / திருக்குறள்)
- விழுமியம் பற்றிச் சுருக்கமாக விளக்குதல்
- விழுமியத்தைக் கடைப்பிடிப்பதால் சமூகம் பெற்றுக்கொள்ளும் நன்மைகள்
- விழுமியங்களைச் சமூகத்தினர் கடைப்பிடிக்காவிட்டால் ஏற்படும் பாதிப்புகள்
- விழுமியங்களைப் பாதுகாக்கச் செய்யவேண்டியவை
- நிறைவு செய்தல்

தலைப்புக்கேற்ப மேடைப்பேச்சொன்றினை நிகழ்த்தும் போது, பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துங்கள்:



| | |
|---|---|
| பேச எடுத்துக்கொண்ட விடயம் | பொருத்தமாக நிறைவு செய்தல் |
| தகவல் ஒழுங்கமைப்பு | பொருத்தமான வேகத்தில் தெளிவான முன்வைப்பு |
| தொனி வேறுபாடு | கருத்துக்களை உறுதிப்படுத்தப் பொருத்தமான மெய்ப்பாடு |
| பேச்சின் உள்ளடக்கம் மனங்கவரும் வகைகளில் அமைந்திருத்தல் | பொருத்தமாக நிறைவு செய்தல் |

பேச்சின் தலைப்புக்கேற்றவாறு விரிவான சட்டகம் ஒன்றினை உருவாக்குவோம்.

## வாசிப்பின் முக்கியத்துவம்

1. வாசிப்பு என்பது
   - ♦ எழுத்தில் அமைந்த பல்வேறு விடயங்களை வாசித்து விளங்கிக் கொள்ளல்
2. வாசிப்பதற்கானவை
   - ♦ சிறுவர் சஞ்சிகை, அறிவித்தல், ஆவணங்கள், குறிப்புகள், சுவரொட்டி, துண்டுப்பிரசுரம்
   - ♦ புத்தகம், சஞ்சிகை, பத்திரிகை
   - ♦ இணையவழி ஆவணங்கள்
3. வாசிப்பின் பயன்கள்
   - ♦ தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்
   - ♦ அறிவினை விருத்திசெய்தல்
   - ♦ ஓய்வை வினைத்திறனுடன் கழித்தல்
   - ♦ மகிழ்ச்சியடைதல்
4. வாசிப்பின்மையால் ஏற்படும் பிரதிகூலங்கள்
   - ♦ விடய அறிவு இல்லாமற்போதல்
   - ♦ இற்றைப்படுத்தாத அறிவு காணப்படுதல்
5. பொருத்தமாக நிறைவுசெய்தல்

செயற்பாடு 1.3.3

## தரப்பட்ட தலைப்பு ஒன்றில் பேசுவோம்

♦ பின்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவுசெய்வோம்.

- சூழலை நேசிப்போம்.
- எமது நாடு / எனது ஊர்
- நான் விரும்பும் பெரியார்
- வீட்டுத்தோட்டம்
- எனது ஆசிரியர்

♦ தலைப்புக்கேற்ற தகவல்களைத் திரட்டிக்கொள்வோம். (நூல், சஞ்சிகை, பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, இணையம், பெரியோர்கள், ஆசிரியர்கள் உதவியுடன்)

♦ மேடைப்பேச்சொன்றினை முன்வைப்பதற்குமுன் சட்டகம் ஒன்றினைத் தயார்ப்படுத்திக்கொள்வோம்.

♦ தயாரித்த சட்டகத்தை ஆசிரியரிடம் காட்டுவோம்.

♦ மூன்று நிமிடங்களில் பேச்சினை நிறைவுசெய்ய வேண்டும் என்பதை நினைவில்கொள்வோம்.

### மாணவர் சுயகணிப்பீடு

பொருத்தமான கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. பேச்சுக்குப் பொருத்தமான சட்டகம் ஒன்றினை அமைத்துக் கொள்ளமுடியும். | | | | |
| 2. தலைப்புக்குப் பொருத்தமான தகவல்களை முன்வைக்கமுடியும். | | | | |
| 3. உணர்ச்சியைப் பொருத்தமான வகையில் வெளிப்படுத்தமுடியும். | | | | |
| 4. மொழியைப் பொருத்தமான வகையில் பிரயோகிக்கமுடியும். | | | | |
| 5. நேரக்கட்டுப்பாட்டைப் பேணமுடியும். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 4

# பல்வகை ஊடக முன்வைப்பு

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,

- பல்வகை ஊடகங்கள் மூலமான முன்வைப்பு ஒன்றில் இருக்க வேண்டிய அம்சங்களை அறிந்துகொள்ளவும்
- இரு ஊடகங்களையேனும் பயன்படுத்தி பொருத்தமான வகையில் முன்வைப்பொன்றைச் செய்வதற்கும் உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

1. பல்வகை ஊடகங்கள்பற்றி அறிந்துள்ளீர்களா?
2. அத்தகைய ஊடகங்கள் ஒன்றினையாவது கூற முடியுமா?
3. பல்வகை ஊடகங்களின் சிறப்பியல்புகளைக் கூறலாமா?

முன்வைப்பு ஒன்றினை நிகழ்த்தும் போது எம்மால் பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்த முடியும். பேச்சு, பாடல், நடனம், நடிப்பு, ஒலிப்பதிவு, காணொளி, நிழற்படம், சித்திரம் முதலான ஊடகங்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலாம்.

முன்வைப்பு ஒன்றினை நிகழ்த்துவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகங்களை ஒரே சமயத்தில் கலந்து உபயோகிப்பதால் அதிக பயனைப் பெற்றுக்கொள்ளமுடியும்.






பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்தி கருத்துக்களை முன்வைப் பதனை பல்வகை ஊடக முன்வைப்பு என்கிறோம். பல்வகைத் திறன்களைப் பெற்றுக்கொள்வதனால் இதனை வெற்றிகரமாக முன்வைக்கலாம்.

வெவ்வேறு கருத்துகளை முன்வைத்து கலந்துரையாடுவோம்.

கருத்துகளை வெளிப்படுத்துவதற்குப் பயன்படும் ஊடகங்கள்


| | |
|---|---|
| 1. பேச்சு | 2. பாடல் |
| 3. சித்திரம் | 4. ஒலிப்பதிவு |
| 5. காணொளி | 6. நிழற்படம் |
| 7. நடனம் | 8. நடிப்பு |
| 9. சுவரொட்டி | 10. வலுகுவி அளிக்கை |

**பல்வகையான ஊடக முன்வைப்பு**


பேச்சு, எழுத்து, நடிப்பு, பாடல் முதலான ஊடகங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி முன்வைப்புகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு பல்வேறு வகையான உத்திகளை ஒரே தடவையில் பயன்படுத்தி முன்வைப்பொன்றினைச் செய்ய முடியும்.

இதற்குத் தொழில்நுட்பக் கருவிகள், தொழில்நுட்பம் சாராத கருவிகளைப் பயன்படுத்த முடியும். இவ்வாறு பல்வேறு வகையான ஊடகங்களைப் பயன்படுத்தி நமது அன்றாட வாழ்வில் பல்வேறு முன்வைப்புகளை (Presentation) நாம் தயாரிக்க வேண்டிவரும்.

பயன்படுத்தக்கூடிய ஊடகங்கள்



இக்கருவிகள் பற்றிக் கலந்துரையாடுவோம்.




வாய்மொழி மூலம் முன்வைக்கும் போது கவனிக்க வேண்டியவை:

- கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுதல்
- நேரக்கட்டுப்பாட்டினை அனுசரித்தல்
- கருத்துக்களைத் தெளிவாகக் கூறுதல்
- பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துதல்
- தலைப்புக்கு ஏற்ற வகையில் கூறுதல்
- பொருத்தமான அங்க அசைவினை மேற்கொள்ளுதல்
- தொனி வேறுபாட்டினைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்
- சரியாக உச்சரித்தல்

எழுத்தின்மூலம் முன்வைக்கும்போது கவனிக்க வேண்டியவை:


- கருத்துக்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல்
- நிறுத்தக்குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்
- பொருத்தமான சொற்களைக் கையாளுதல்
- எழுத்துரு, அளவு ஆகியவற்றைப் பொருத்தமுறக் கையாளல்
- எளிமையான மொழிப் பிரயோகம்
- சரியான முறையில் சொற்களைப் பிரித்து எழுதுதல்
- வழுக்களின்மை
- புலக்காட்சிக்குத் தெளிவாக அமைத்தல்

வலுகுவி (Power point ) மூலமான முன்வைப்பினை மேற்கொள்ளும் போது கவனிக்கவேண்டியவை:

- பொருத்தமான எழுத்துருவைப் (Font) பயன்படுத்துதல்
- முன்வைப்புப் பக்கம் நிறத்திற்கு ஏற்றவாறு எழுத்துக்களின் நிறத்தைப் பயன்படுத்துதல்
- பொருத்தமான எழுத்து அளவைப் (Font size) பயன்படுத்துதல்
- பொருத்தமான ஒலி, ஒளிப் பிரயோகம்
- தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல்
- தேவைக்கேற்ப அட்டவணைகள், உருக்கள், வரைபுகள் முதலானவற்றைப் பயன்படுத்துதல்
- இயங்கு உருக்களை (Animations) பொருத்தமாகப் பயன்படுத்தல்

இந்தப் புத்தகம்...

இரசனை மிகுந்த புத்தகம், வாசிக்கத் தூண்டும் புத்தகம், மனதைக் கவரும் புத்தகம், இப்புத்தகத்தை எழுதியவர் பற்றிய அறிமுகத்தை முன்வைப்போம்.






எழுத்தாளர் பற்றி....

சி. வி. வேலுப்பிள்ளை மலையகத்தின் முன்னோடி எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் கொழும்பில் நாலந்தா கல்லூரியில் கல்வி கற்றார். சேக்ஸ்பியர் முதலியோரின் ஆக்கங்களை விரும்பிப்படித்தார். ஆசிரியர், அரசியல்வாதி, தொழிற்சங்கவாதி, கவிஞர், பத்திரிகை ஆசிரியர் எனப் பன்முக ஆளுமையுள்ளவராகத் திகழ்ந்தார். இவர் விஸ்மாஜினி, (இசை நாடகம்) இலங்கை தேயிலைத் தோட்டத்திலே, வீடற்றவன், இனிப்படமாட்டேன், வாழ்வற்ற வாழ்வு, எல்லைப்புறம், மலைநாட்டு மக்கள் பாடல்கள் (நாட்டார் பாடல்களின் தொகுப்பு) போன்ற நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதினார். கதை என்னும் இலக்கிய இதழ், மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மாவலி என்ற மாத இதழ் ஆகியவற்றின் ஆசிரியராகச் செயற்பட்டவர்.

1934ஆம் ஆண்டில் இரவீந்திரநாத் தாகூர் இலங்கை வந்திருந்த போது அவரை 1934 மே 14 இல் கொழும்பில் சந்தித்தார். 1961இல் வீரகேசரியில் காலம் பதில் சொல்லட்டும், சாக்குக்காரன் என்ற இரு சிறுகதைகளை எழுதினார்.

இலங்கை வானொலியான வொயிஸ் ஒ.ஃப் லங்கா (Voice of Lanka) அவரது Tea Pluckers என்ற ஆங்கிலக்கவிதையை அறிமுகம் செய்தது. இவருடைய சேவையினைக் கௌரவிக்கும் விதமாக, இவரது நினைவு நாளான 2014 செப்தெம்பர் 21ஆம் திகதி, அஞ்சல்தலை ஒன்று அஞ்சல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

செயற்பாடு 1.4.1

பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்தி முன்வைப்பு செய்வது தொடர்பாக நீங்கள் பெற்றுக்கொண்ட அறிவைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை கூறுங்கள்.

உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடி உங்களது விடைகளைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

1. இப்பாடத்தில் குறிப்பிடப்படும் ஊடகங்கள் இரண்டினைத் தருக.

2. பல்வேறு வகையான முன்வைப்புக்களைச் செய்யும் போது பயன்படுத்தக்கூடிய இரண்டு ஊடகங்களைக் கூறுங்கள்.

3. வலுகுவி (Power Point) மூலமான முன்வைப்புக்கான தயார்படுத்தலின் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

4. நீங்கள் பல்வகை ஊடக முன்வைப்புக்குத் தேர்ந்தெடுத்த நூலின் பெயரையும் அதன் ஆசிரியர் பெயரையும் கூறுங்கள்.

செயற்பாடு 1.4.2

முன்வைப்புக்குத் தயாராவோம்.

1. பின்வரும் விடயங்களுள் உங்களுக்கு விருப்பமானதைத் தெரிவு செய்யுங்கள்.
   - ☆ நான் விரும்பும் தமிழறிஞர்
   - ☆ மாணவர் ஒருவரின் புதிய கண்டுபிடிப்பு
   - ☆ பொலித்தீன் பயன்பாட்டைக் குறைக்க எம்மால் செய்யக்கூடியவை
   - ☆ மனங்கவர்ந்த எழுத்தாக்கங்களும் வாழ்க்கைக்கான தகவல்களும்
   - ☆ தேசிய கலாசார விடயங்களுடன் இணைந்த சம்பிரதாயங்கள்
2. முன்வைப்புக்காக உங்களுக்கு விருப்பமான இரண்டிற்கு மேற்பட்ட ஊடகங்களைத் தெரிவுசெய்யுங்கள்.
3. நீங்கள் தெரிவுசெய்த விடயம் தொடர்பான முக்கியமான தகவல்களைத் திரட்டிக்கொள்ளுங்கள்.
4. ஐந்து நிமிடங்களுக்கான முன்வைப்புத் திட்டம் ஒன்றினைத் தயாரியுங்கள்.
5. முன்வைத்தலுக்கு முன்னர் உங்கள் திட்டமிடலை ஆசிரியருக்குக் காட்டி, சரிபார்த்துக்கொள்ளுங்கள்.
6. முன்வைப்புக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
7. விடயத்துக்கும் முன்வைக்கும் முறைமைக்கும் பொருத்தமான வகையில் மொழியைக் கையாளுங்கள்.
8. நேரக் கட்டுப்பாட்டுக்கு அமைவாக முன்வைப்பினை நிகழ்த்துங்கள். (ஒவ்வொரு முன்வைப்பிற்கும் ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.)

## மாணவர் சுயகணிப்பீடு

பொருத்தமான கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுவோம்.

| | செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| 1. | பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்தி முன்வைப்புக்கான திட்டத்தைத் தயாரிக்கமுடியும். | | | | |
| 2. | முன்வைப்புக்குத் தேவையான கருவிகளைத் தயார் செய்துகொள்ள / தேடிப்பெற்றுக்கொள்ளமுடியும். | | | | |
| 3. | பொருத்தமான இரண்டு ஊடகங்களைப் பயன்படுத்தி முன்வைப்புச் செய்யமுடியும். | | | | |
| 4. | பொருத்தமான மெய்ப்பாட்டோடு முன்வைப்புச் செய்யமுடியும். | | | | |

# மொடியூல் 2

## தொழில்முறைப் படைப்புகள்

### கற்றல் சந்தர்ப்பங்கள்

**வாழ்த்துமடல் தயாரிப்போம்**

இக்கற்றல் சந்தர்ப்பம், வாழ்த்துமடல் ஒன்றில் காணப்படவேண்டிய பண்புகளை அறிந்து, அதனைப் பிழையின்றியும் ஆக்கபூர்வமாகவும் தயாரிக்கும் ஆற்றலை வழங்குகின்றது.

**அழைப்பிதழ் தயாரிப்போம்**

இக்கற்றல் சந்தர்ப்பம், அழைப்பிதழ் ஒன்றின் பண்புகளை அறிந்து அதனைப் பிழையின்றியும் ஆக்கபூர்வமாகவும் தயாரிக்கும் ஆற்றலை வழங்குகின்றது.

**சுவரொட்டி தயாரிப்போம்**

இக்கற்றல் சந்தர்ப்பம், சுவரொட்டியில் காணப்படவேண்டிய பண்புகளை அறிந்து, அதனைப் பிழையின்றியும் ஆக்கபூர்வமாகவும் தயாரிக்கும் ஆற்றலை வழங்குகின்றது.

**ஒத்தகருத்துச் சொற்கள்**

இக்கற்றல் சந்தர்ப்பம் தமிழ்மொழியிலுள்ள சொற்களுக்கு நிகரான வேறு சொற்களையும் அறிந்துகொள்கின்ற வாய்ப்பினையும் வழங்குகின்றது.

**கலைச்சொற்கள்**

இக்கற்றல் சந்தர்ப்பம் பாடங்களிலுள்ள கலைச்சொற்களை இனங்காண்பதற்கும் அவற்றை விளங்கிப் பொருத்தமுறப் பயன்படுத்துவதற்குமான ஆற்றலை வழங்குகின்றது.

கற்றல் சந்தர்ப்பம் 1

# வாழ்த்துமடல் தயாரிப்போம்

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றற் சந்தர்ப்பத்தினுடாக,
- வாழ்த்துமடல் ஒன்றில் காணப்படவேண்டிய பண்புகளை அறியவும்
- பிழையின்றியும் ஆக்கபூர்வமாகவும் வாழ்த்து மடல்களைத் தயாரிக்கக்கூடிய ஆற்றலை உங்களால் பெற்றுக்கொள்ளமுடியும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

- தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள்.

1. வாழ்த்துமடல்களைப் பார்த்திருக்கின்றீர்களா?
2. வாழ்த்துமடல்கள் எச்சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகின்றன?
3. யாராவது உங்களுக்கு வாழ்த்துமடல் தந்திருக்கிறார்களா? எதற்காகத் தந்திருக்கிறார்கள்?
4. நீங்கள் யாருக்காவது வாழ்த்துமடல் அனுப்பியிருக்கிறீர்களா? யாருக்கு? எதற்காக?
5. நீங்கள் அனுப்பிய வாழ்த்துமடல் எவ்வாறு வடிவமைக் கப்பட்டிருந்தது?
6. நீங்கள் சுயமாக வாழ்த்துமடல்களை வடிவமைத்திருக்கிறீர்களா?



ஆசிரியர், வினாக்களை வினவும் போது எங்களது முறை வரும் வரையில் காத்திருந்து விடையளிக்கும் பண்பை வளர்த்துக்கொள்வோம்.



வாழ்த்துமடல் என்பது, ஒருவரை வைபவத்தின் போது, பண்டிகையின் போது, அவர் எய்திய அடைவின் போது அவரை வாழ்த்துவதற்குப் பயன்படுகின்ற எழுத்து மூலமான ஓர் ஊடகமாகும். அது வாழ்த்துச் செய்தியோடு கவர்ச்சி கரமான அமைப்பினையும் கொண்டிருக்கும். தற்காலத்தில் எண்ணிம (Digital) வடிவிலும் இது அனுப்பப்படுகின்றது.

## செயற்பாடு 2.1.1

கலைமகள் மகாவித்தியாலயத்தில் தரம் 6இல் கற்கும் மாணவர் களுடைய வகுப்பாசிரியரின் பிறந்த தினம் அடுத்த வாரம் வருகின்றது. அவ்வகுப்பு மாணவர்கள் அவருக்கு ஒரு வாழ்த்துமடலைத் தாமே தயாரித்து, அவரின் பிறந்த நாளன்று கொடுப்பதற்குத் தீர்மானித்தார்கள். மாணவர்கள் அனைவரும் இணைந்து, வாழ்த்துமடலை எவ்வாறு தயாரிப்பது என்பதுபற்றித் திட்டமிட்டார்கள்.


- செயற்பாட்டின் தன்மைக்கேற்ப குழுக்களாக இணைந்தனர்.
- பின்வரும் விடயங்கள்பற்றிக் கலந்துரையாடினர்.
  - வாழ்த்துமடலின் அளவு
  - வாழ்த்துமடலின் நிறம்
  - அதில் இடம்பெறவேண்டிய அலங்காரங்கள்
  - வாழ்த்துச் செய்தி (கருத்துச்செறிவு, பொருத்தமான மொழிப்பயன்பாடு, சுருக்கம், நேர்த்தி)
- இந்தக் கலந்துரையாடல் முடிவுகளை முன்வைப்புச் செய்தனர்.

வாழ்த்துமடல் தொடர்பாக அறிந்து அதன் பண்புகள்பற்றி ஆசிரியர், மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

நாம்
வாழ்த்து அட்டையைப்
பயன்படுத்தும்
சில சந்தர்ப்பங்கள்



பிறந்த தினம்



ஆசிரியர் தினம்



அன்னையர் தினம்



போட்டி அல்லது பரீட்சையில்
வெற்றிபெறுதல்

## செயற்பாடு 2.1.2

- பொருத்தமான முறையில் குழுக்களாக இணைவோம்.
- ஒவ்வொரு குழுவும் வெவ்வேறு சந்தர்ப்பத்திற்கான வாழ்த்துமடல் ஒவ்வொன்றை குழுவாக அவதானிப்போம்.

  சந்தர்ப்பங்கள்:

  1. பிறந்தநாள்
  2. தாய்மொழித்தினம்
  3. ஆசிரியர்தினம்
  4. சிறுவர்தினம்
  5. புதுவருடம்
  6. நத்தார் பண்டிகை

- வாழ்த்துமடல்களைச் செலவின்றித் தயாரிப்பதற்குப் பொருத்தமான பொருள்களைப்பற்றி குழுநிலையில் கலந்துரையாடி அவற்றைப் பட்டியற்படுத்துவோம்.
- குழுச் செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட நேரத்தைக் கவனத்திற் கொண்டு செயற்படுவோம்.
- குழு ரீதியாக ஒன்றிணைந்து செயற்படுவோம்.
- தயாரித்த பட்டியலை ஏனைய குழுக்களுக்கும் காண்பிப்போம்.
- அதன் பண்புகளைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதுவோம்.

## செயற்பாடு 2.1.3

- நாங்கள் பட்டியலிட்ட பொருள்களைக் குழுவாக இணைந்து சேகரித்துக்கொள்வோம்.
- குழுவில் உள்ளவர்களில் மிக அண்மையில் பிறந்தநாள் கொண்டாட உள்ள ஒருவரைத் தெரிவுசெய்து, அவருக்கான வாழ்த்துச் செய்தியை உருவாக்குவோம்.
- வாழ்த்துமடலை விரும்பிய வடிவில் தயாரித்துக்கொள்வோம்.
- சேகரித்துக்கொண்ட பொருள்களைப் பயன்படுத்தி வாழ்த்துமடலை அழகுபடுத்துவோம்.
- குழுநிலையில் தயாரித்த வாழ்த்துமடல்களை ஓரிடத்தில் காட்சிப் படுத்துவோம்.
- ஆசிரியர், சந்தர்ப்பம் வழங்கும் போது நமது கருத்துகளைக் கலந்து ரையாடி அதனைக் குழுநிலையில் முன்வைப்போம்.
- அவற்றை, ஒப்பிட்டு நோக்குவோம். மதிப்பீட்டுப் படிவத்தை நிரப்புவதன் மூலம் ஒவ்வொருவரும் தயாரித்த வாழ்த்துமடலின் தரத்தை அறிந்து கொள்வோம்.
- பயனுள்ள கருத்துகளைக் கூறி ஏனைய குழுக்களை உற்சாகப் படுத்துவோம்.

## செயற்பாடு 2.1.4

**பிறந்தநாள் வாழ்த்து!**

அன்பு நண்பி வதனிக்கு,
பலகலையும் கற்று
பண்பால் பதவியால்
பார்மேல் உயர்வுற்று
என்றும் மகிழ்வோடு
உள்ளம் நிறைவுற்று
நலமாய் வாழ
வாழ்த்துகின்றேன்!
அன்புடன் கவிதா.



♦ வாழ்த்துமடலை வாசித்து வினாக்களுக்கு விடையளியுங்கள்.

வாழ்த்துமடல்
- → யாரால் அனுப்பப்பட்டது? ______
- → யாருக்கு அனுப்பப்பட்டது? ______
- → எதற்கான வாழ்த்துச் செய்தி? ______
- → இருவருக்குமான உறவுமுறை? ______

## செயற்பாடு 2.1.5

♦ நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கொண்டு சுயமாக வாழ்த்துமடல் ஒன்றைத் தயாரியுங்கள்.

♦ தயாரித்த வாழ்த்துமடலை ஆசிரியரின் வழிகாட்டலுக்கமைய திருத்தம் செய்து, பொருத்தமான இடத்தில் காட்சிப்படுத்துங்கள்.

### மாணவர் சுயகணிப்பீடு

பொருத்தமான கட்டத்தினுள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. நான் வாழ்த்துமடல்கள்பற்றி அறிந்துகொண்டேன். | | | | |
| 2. வாழ்த்துச் செய்தி எழுதும் முறையினை அறிந்து கொண்டேன். | | | | |
| 3. வாழ்த்துச் செய்தி ஒன்றை என்னால் எழுதமுடியும். | | | | |
| 4. பொருத்தமான வாழ்த்துமடலை என்னால் சுயமாகத் தயாரிக்கமுடியும். | | | | |
| 5. கழிவுப் பொருள்களைப் பயன்படுத்தி கவர்ச்சிகரமான வாழ்த்துமடல்களை என்னால் தயாரிக்கமுடியும். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 2

# அழைப்பிதழ் தயாரிப்போம்

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,

- ஓர் அழைப்பிதழின் பண்புகளை அறியவும்
- அழகாகவும் பிழையின்றியும் ஆக்கபூர்வமானதாகவும் தயாரிக்கவும் உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள்.

1. நீங்கள் ஏதாவது அழைப்பிதழ்களைப் பார்த்திருக்கிறீர்களா?
2. அந்த அழைப்பிதழ்கள் எவற்றைப்பற்றியவை?
3. அழைப்பிதழ்களின் அவசியம்பற்றிக் கூறமுடியுமா?

## செயற்பாடு 2.2.1

- செயற்பாட்டுக்கு ஏற்ப நாம் குழுக்களாகுவோம்.
- குழுவாக இணைந்து, உங்களுக்குத் தரப்படும் அழைப்பிதழ்பற்றிக் கலந்துரையாடி, அவற்றில் அவதானித்த விடயங்கள் சிலவற்றைப் பட்டியற்படுத்துவோம்.

1. ................................ 2. ................................ 3. ................................

4. ................................ 5. ................................ 6. ................................

## செயற்பாடு 2.2.2

- குழுவுக்கு ஆசிரியர் வழங்கும் அழைப்பிதழை அவதானிப்போம்.
- செயற்பாடு 2.2.1இல் பட்டியற்படுத்திய விடயங்கள், அவ் அழைப்பிதழில் உள்ளனவா என அவதானிப்போம். மேலதிகமான விடயங்கள் இருந்தால் அவற்றையும் குறித்துக்கொள்வோம்.
- அவதானித்த விடயங்களை முன்வைப்போம்.

## செயற்பாடு 2.2.3

### அழைப்பிதழ்!

மமா / க / கண்டி மலைச்சாரல் தமிழ்க் கலவன் பாடசாலையின்
தமிழ் இலக்கிய மன்றம் ஒழுங்குசெய்து நடத்தும்

**கலைவிழா – 2026**

திகதி : 16.05.2026

நேரம் : காலை 8.30 முதல் 10.30 மணி வரை

இடம் : பாடசாலையின் பிரதான மண்டபம்

**தலைமை**

க.கவியரசன் (அதிபர்)

**பிரதம விருந்தினர்**

மு.வெற்றிச்செல்வன் (வலயக் கல்விப் பணிப்பாளர்)

**சிறப்பு விருந்தினர்கள்**

சி.முருகானந்தன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர்)
பி.சிவநாதன் (முன்னாள் அதிபர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

**தமிழ் இலக்கிய மன்றம்**
கண்டி மலைச்சாரல் தமிழ்க் கலவன் பாடசாலை.

- செயற்பாட்டின் தன்மைக்கேற்ப, குழுக்களாகுவோம்.
- தரப்பட்டுள்ள அழைப்பிதழை வாசித்து, பின்வரும் குறிப்பட்டையை நிரப்புவோம்.

1. அழைப்பிதழில் குறிப்பிடப்படும் நிகழ்ச்சி

2. நிகழ்ச்சி நடைபெறும் நேரம்

3. நிகழ்ச்சி நடைபெறும் இடம்

4. பிரதம அதிதியின் பதவி

5. நிகழ்ச்சியை ஒழுங்குசெய்த மன்றம்

6. நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்கள்

- ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒவ்வொருவரது குறிப்பட்டையையும் முன்வைப்போம்.

## செயற்பாடு 2.2.4

- பின்வரும் அட்டையிலுள்ள தகவற் குறிப்புகளைக்கொண்டு அழைப்பிதழ் ஒன்றை வடிவமைப்புச் செய்வோம்.

திகதி : 3 டிசம்பர் 2026

நேரம் : மு.ப. 10.00 மணி - பி.ப. 7.00 மணி வரை

இடம் : நகரசபை மண்டபம், மட்டக்களப்பு.

நிகழ்ச்சி : சித்திரக் கண்காட்சி

சித்திரங்கள் : சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாகப் பாடசாலை மாணவர்களால் வரையப்பட்டவை.

## செயற்பாடு 2.2.5

- தனித்தனியே ஒவ்வொருவராகச் செயற்படுவோம்.
- அழைப்பிதழ் ஒன்றை எளிமையாகத் தயாரிக்கத் தேவையான பொருள்களைப் பட்டியற்படுத்துவோம். (வாழ்த்துமடல் தயாரிப்பதற்காகக் காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலில் உள்ள பொருள்களையும் நீங்கள் கவனத்திற் கொள்ளலாம்.)

1. .............................................. 2. ..................................................
3. ............................................ 4. ..................................................
5. ............................................ 6. ..................................................
7. ............................................ 8. ..................................................

## செயற்பாடு 2.2.6

கலைவிழா

பரிசளிப்பு விழா

சிறுவர் தினம்

புதிய கட்டடத் திறப்பு விழா

சுற்றாடல் தினம்

- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பழத்தின் பெயரை வைத்துக்கொள்வோம்.
- மேலே உள்ள விழாக்களில் ஒவ்வொன்றை ஒவ்வொரு குழுவுக்கும் இடுவோம். நமது பாடசாலையில் அந்த விழா நடைபெறப் போவதாகக் கருதி ஓர் அழைப்பிதழினைத் திட்டமிடுவோம்.
- அழைப்பிதழ் எழுதும் முறையைப் பின்பற்றி எழுதுவோம்.
- அழைப்பிதழைச் செவ்வகவடிவில் இரண்டாக மடிக்கக்கூடியவாறு தயாரித்துக்கொள்வோம்.
- சேகரித்த பொருள்களைப் பயன்படுத்தி புத்தாக்க அலங்காரத்துடன் அழைப்பிதழைத் தயாரிப்போம்.
- குழுவிற்காக வழங்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட இடத்தில் அழைப்பிதழைக் காட்சிப்படுத்துவோம்.
- காட்சிப்படுத்திய அழைப்பிதழ்பற்றிய கருத்துக்களைக் குழுமுறையில் முன்வைப்போம்.

## செயற்பாடு 2.2.7

- கீழே அழைப்பிதழில் காணப்படும் விடயங்கள் சில ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தித் தனித்தனியே எழுதுவோம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறப்பு விருந்தினர் பெயர் | 1 | .................................... |
| 2 | தலைப்பு | 2 | .................................... |
| 3 | பிரதம விருந்தினர் பெயர் | 3 | .................................... |
| 4 | ஒழுங்கமைப்பாளர்கள் | 4 | .................................... |
| 5 | பாடசாலையின் பெயர் | 5 | .................................... |
| 6 | நேரம் | 6 | .................................... |
| 7 | தலைவரின் பெயர் | 7 | .................................... |

## செயற்பாடு 2.2.8

- குழுச் செயற்பாட்டின் போது பெற்றுக்கொண்ட அனுபவங்களைப் பயன்படுத்தி, அழைப்பிதழ் ஒன்றைத் தயாரித்துக்காட்டுவோம்.
- நாம் தயாரித்த அழைப்பிதழ்களை அனைவரும் பார்வையிடும் வகையில் வகுப்பறையில் காட்சிப்படுத்துவோம்.
- அவை தொடர்பான கருத்துக்களை முன்வைப்போம்.

## மாணவர் சுயகணிப்பீடு

பொருத்தமான கட்டத்துள் ✓ என அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. அழைப்பிதழ்கள்பற்றி அறிந்துகொண்டேன். | | | | |
| 2. அழைப்பிதழில் உள்ளடங்கவேண்டிய விடயங்களை அறிந்துகொண்டேன். | | | | |
| 3. அழைப்பிதழின் வடிவத்தை அறிந்துகொண்டேன். | | | | |
| 4. என்னால் சுயமாக ஓர் அழைப்பிதழைத் தயாரித்துக் காட்டமுடியும். | | | | |
| 5. வெளியில் வீசப்படும் (கழிவு) பொருள்களைப் பயன்படுத்தி என்னுடைய கற்பனைக்கேற்றவாறு அழைப்பிதழ்களை அழகுபடுத்தமுடியும். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 3

# சுவரொட்டி தயாரிப்போம்

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,
- சுவரொட்டியில் காணப்பட வேண்டிய பண்புகளை அறிந்து
- பிழையின்றியும் ஆக்கபூர்வமாகவும் சுவரொட்டி ஒன்றினை உங்களால் தயாரிக்க இயலும்.

பின்வரும் உரையாடலை வாசியுங்கள்:

கமலன்: சேர், நமது பாடசாலை அறிவித்தல் பலகையில் எலிக்காய்ச்சல், கொரோனாபற்றி எழுதப்பட்ட பெரிய தாள் ஒன்று ஒட்டப்பட்டுள்ளதை நீங்கள் பார்த்தீர்களா சேர்?

ஆசிரியர்: அப்படியா! நான் இன்று அறிவித்தல் பலகையைப் பார்க்கச் செல்லவில்லை. இடைவேளையின் போது பார்க்கிறேன்.

ஆசிரியர்: (இடைவேளைக்குப் பிறகு வகுப்பறைக்கு வருகை தரல்) ஆம் கமலன், நான் அறிவித்தல் பலகையைப் பார்த்தேன். எலிக்காய்ச்சல், கொரோனா விழிப்புணர்வுத் தகவல்கள் அடங்கிய சுவரொட்டி ஒன்று ஒட்டப்பட்டுள்ளது.

கமலன்: அப்படியா சேர், நான் சுவரொட்டிகளைப் பற்றி முன்னர் படித்திருக்கின்றேன் சேர், இது நல்ல கவர்ச்சியாக இருக்கின்றது. நாமும் இப்படித் தயாரிக்கலாந்தானே சேர்.

ஆசிரியர்: தாராளமாக!



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

நீங்களும் கமலனைப் போல வேறேதும் சுவரொட்டிகளைப் பார்த்திருப்பீர்கள்? நீங்கள் பார்த்த சுவரொட்டிகளில் அவதானித்த வற்றைக் கூறமுடியுமா?

| | |
|---|---|
| 1 | 2 |
| 3 | 4 |
| 5 | 6 |
| 7 | 8 |

## செயற்பாடு 2.3.1

- செயற்பாட்டிற்கு ஏற்ப நாம் குழுக்களாகுவோம்.
- ஆசிரியர் காட்சிப்படுத்திய சுவரொட்டி ஒன்றினை அவதானிப்போம்.
- சுவரொட்டியில் நாம் அவதானித்த விடயங்களை குழுநிலையில் ஒவ்வொருவராக முன்வைப்போம்.

செயற்பாடு 2.3.2

## சுவரொட்டி

**மேமா/கொ/ கொழும்பு அக்பர் முஸ்லிம் பாடசாலையின்**

**விஞ்ஞானக் கண்காட்சி – 2026**

திகதி : 21-23 ஜனவரி 2026

நேரம் : காலை 9.00 மணி - 4.00 மணி வரை

இடங்கள் : பிரதான மண்டபம்,
புதிய விஞ்ஞான ஆய்வுகூடம்

விடயங்கள்: மாணவர் ஆக்கங்கள்
விஞ்ஞானப் புதுமைகள்
நவீன சாதனங்கள்
வலுகுவி அளிக்கைக் (Power Point) காட்சிகள்
இன்னும் பல....

அனைவரும் வருக!

விஞ்ஞான மன்றம்
கொழும்பு அக்பர் முஸ்லிம் பாடசாலை

- மேலே தரப்பட்டுள்ள சுவரொட்டியை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்போம்.

1. இந்தச் சுவரொட்டி எதைப்பற்றியது?

2. நிகழ்ச்சி தொடங்கும் நேரம் யாது?

3. கண்காட்சியில் எவற்றைக் கண்டுகொள்ள முடியும்?

4. கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகின்றன?

5. கண்காட்சி நடைபெறும் மாவட்டம் எது?

## சுவரொட்டி

அவதானிப்பவர் ஒரு குறுகிய நேரத்தில் வாசித்து அறிந்து கொள்வதற்காக, (படங்களுடன்) பெரியதாளில், பெரிய எழுத்துக் களில் எழுதி / அச்சிட்டு சுவரில் காட்சிப்படுத்தப்படும் தொடர்பாடல் சாதனம் சுவரொட்டி ஆகும்.

### செயற்பாடு 2.3.3

பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விடயங்கள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் x எனவும் கூற்றுக்கு எதிரேயுள்ள கட்டத்துள் அடையாளம் இடுவோம்.

| | | |
|---|---|---|
| 1. | சுவரொட்டி சிறிய எழுத்துக்களில் எழுதப்படும். | |
| 2. | சுவரொட்டி பல வர்ணங்களிலும் காணப்படும். | |
| 3. | சுவரொட்டியை வாசிப்பதற்கு அதிகநேரம் தேவைப்படும். | |
| 4. | இலகுவான மொழி வாசகங்கள் காணப்படும். | |
| 5. | விடயங்கள் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கும். | |
| 6. | சுவரொட்டியின் அளவு சற்றுத் தூரத்திலிருந்தும் பார்க்கக் கூடியதாகப் பெரியதாக இருக்கும். | |

செயற்பாடு 2.3.4

- சுவரொட்டி ஒன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களைக் குழுவில் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துவோம்.

| | |
|---|---|
| 1 | 2 |
| 3 | 4 |
| 5 | 6 |
| 7 | 8 |

காட்சிப்படுத்தப்பட்டுள்ள பட்டியலை அவதானிப்போம்.

1. டிமைன் தாள்
2. கத்தரிக்கோல்
3. நிறப்பூச்சுக்கள்
4. பென்சில்
5. நிறப்பேனா
6. வர்ணப்பூச்சுப் பேனா
7. அழிறப்பர்

- ஆசிரியரால் வழங்கப்படும் ஆலோசனைக்கமைய குழுநிலையில் சுவரொட்டியைத் தயாரித்துக்காட்டுவோம்.

மாணவர் சுய கணிப்பீடு

பொருத்தமான கட்டத்துள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. சுவரொட்டி என்றால் என்னவென்பதை மற்றவர்களுக்கும் தெளிவுபடுத்தமுடியும். | | | | |
| 2. குறித்த சுவரொட்டியைத் தயாரிப்பதற்குரிய பொருள்களைப் பட்டியற்படுத்தமுடியும். | | | | |
| 3. சுவரொட்டிபற்றி அறிந்துகொண்ட விடயங்களைக் கவனத்திற்கொண்டு, சிறந்த முறையில் சுவரொட்டிகளைத் தயாரித்துக் காட்டுவேன். | | | | |
| 4. பதிவிறக்கம் செய்வதன் மூலமாகவும் வேறு வழிகளிலும் வெவ்வேறு சுவரொட்டிகளின் தன்மைகளைக் கண்டறிவேன். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 4

# ஒத்தகருத்துச் சொற்கள்

ஐம்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,

- ஒத்தகருத்துச் சொற்கள்பற்றிக் கலந்துரையாடவும்
- அவைபற்றிய விளக்கத்தினைப் பெறவும்
- மொழிப் பயன்பாட்டில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அதனைப் பயன்படுத்தவும் உங்களால் இயலும்.



**நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்**

1. ஒத்தகருத்துச் சொல் என்றால் என்ன?
2. ஒத்தகருத்துச் சொற்களின் பயன்பாடு யாது?
3. இரக்கம், வீரம் என்பனவற்றுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை கூறுக.

**செயற்பாடு 2.4.1**

- கவிதையினைப் பொதுவான ஒரு மெட்டில் பாடலாகப் பாடிக்காட்டுவோம்.

*மழைபொழிந்தது*

மழை பொழிந்தது மழை பொழிந்தது
மண் மடந்தையின் மனம் கசிந்தது
மலையிலிருந்து பல்நதி விரைந்திட
மரஞ்செடி கொடி மகிழ்ந்து கும்பிட (மழை பொழிந்தது)

கருணை வானக் கரம் வழங்கிய
கனிந்த நாவற் பழஞ் சொரிந்தன
பரந்த பூமிச் சருகதிர்ந்திடப்
பட பட பட சட சடவென (மழை பொழிந்தது)

தாளங் கொட்டித் தவளைத் தட்டார்
தங்க மின்கொடி தாலி செய்திட
ஆழமான குளம் வழிந்திட
அடிஅடியென விடிய விடிய (மழை பொழிந்தது)

கலையிழந்து தம் கணவர் நெஞ்சிடை
காதல் வஞ்சியர் கூதல் அஞ்சிட
மலை பிளந்தென இடிமுழங்கிட
மை யிருளிடை பொய்யெனப் பெரு (மழை பொழிந்தது)

இடரெனும் புவிக் கடலில், உண்மை யென்
இரவி யள்ளிய கருமுகில் மனத்
திடைப் புகுந் துணர் வறுத்த செந்தமிழ்
உடைப் பெடுத்தொரு படைப் புதித்தென (மழை பொழிந்தது)

கவிஞர் நீலாவணன்

செயற்பாடு 2.4.2

மேலே உள்ள கவிதையில் காணப்படும் சொற்கள், கீழ் காட்டப்படுகின்ற அட்டவணையில் தரப்படுகின்றன. அச்சொற்களுக்கான பொருளைத் தருகின்ற வேறு சொற்களை எழுதுவோம்.

| சொல் | ஒத்தகருத்துச் சொல் |
|---|---|
| மடந்தை | |
| மனம் | |
| நதி | |
| மகிழ்ந்து | |
| கருணை | |
| வானம் | |
| கரம் | |
| வழங்கிய | |
| கனிந்த | |
| மலை | |

## செயற்பாடு 2.4.3

கீழே சில சொற்கள் தரப்பட்டுகின்றன. அவற்றுக்கான ஒத்த கருத்துச் சொற்களை புத்தகங்களின் மூலமாகவோ நண்பர்களிடம் கேட்டறிந்தோ தனித்தனியே முன்வைப்போம்.

| | | | |
|---|---|---|---|
| உவகை | இலக்கு | ஏளனம் | கம்பீரம் |
| பார் | வலிமை | அல்லல் | இறுமாப்பு |
| பிணி | தனயன் | எழில் | பகலவன் |
| மகவு | கறை | ஐயம் | கலகம் |
| ஈகை | கிளை | ஆசனம் | ஓட்டுநர் |
| பிணக்கு | ஞானம் | மாதர் | நிகர் |
| மாண்பு | மாந்தர் | சீர் | தன்னலம் |
| விண்மீன் | இயம்புதல் | பணி | |

## செயற்பாடு 2.4.4

அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களைப் பொருத்தமான இடைவெளியில் எழுதி வாக்கியங்களைப் பூரணப்படுத்துவோம்.

(இன்னல்கள், நாள், குரு, ஆகாயத்தை, கீர்த்தி, இல்லங்கள்)

(எ.டு) எனது பிறந்த தினம் வருவதற்கு இன்னும் நான்கு மாதங்கள் உள்ளன.

1. இலங்கை, சுற்றுலாத் தலங்களுக்கு மிகவும் ........... மிக்க நாடு ஆகும்.
2. அறிஞர் அரிஸ்டோட்டிலின் .............................. பிளேற்றோ ஆவார்.
3. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக உலக மக்கள் அனைவருக்கும் பல்வேறுவிதமான ..........................ஏற்பட்டுள்ளன.
4. ஊர்மக்கள் புத்தாண்டு தினத்தைக் கொண்டாட ............................. தோறும் தோரணங்கள் கட்டி அலங்கரித்திருந்தனர்.
5. விவசாயி நீண்ட நேரம் ......................................... அவதானமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

செயற்பாடு 2.4.5

தரப்பட்டுள்ள சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் எழுதுவோம்.

எ.கா : நூல்கள்

மாணவர்கள் வாசிகசாலையினைப் பயன்படுத்துவதனால் அதிக நன்மை உண்டு.

பொறி, தினசரி, மதி, அகம், தெளிவு, நவின்றான், தூய்மை, கையளித்தல், இணக்கம், அவை, நூல்கள்

மாணவர் சுய கணிப்பீடு

பொருத்தமான கட்டத்துள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. ஒத்தகருத்துச் சொற்களைக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்களை எழுதுவேன். | | | | |
| 2. பாடல்களின், கவிதைகளின் கருத்தை நன்றாக விளங்கிக்கொள்ள ஒத்தகருத்துச் சொற்களை அறிந்து வைத்திருப்பது அவசியமென்பதை கவனத்திற் கொண்டுள்ளேன். | | | | |
| 3. பேசும் போதோ எழுதும் போதோ சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சொற்களைப் பயன்படுத்துவதற்கு ஒத்தகருத்துச் சொற்களை அறிந்துவைத்திருப்பது அவசியமென்பதை அறிவேன். | | | | |
| 4. ஒத்தகருத்து சொற்களை இனங்கண்டுகொள்ள அகராதியின் துணை அவசியமென்பதை புரிந்துகொண்டேன். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 5

# கலைச்சொற்கள்

ஒரு மணித்தியாலம் நாற்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,

- கலைச்சொற்கள் என்றால் என்ன என்றும்
- ஏலவே கற்ற பாடங்களிலுள்ள கலைச்சொற்களை கண்டறிந்தும் அவற்றை விளக்கத்துடன் பயன்படுத்தவும் உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள்

1. நீங்கள் ஆக்கங்களை வாசிக்கும்போது, அதனோடு தொடர்புடை கலைச்சொற்களை இனங்கண்டுள்ளீர்களா?
2. அவ்வாறான கலைச்சொற்களை உங்களால் கூறமுடியுமா?
3. கம்பியூட்டர், ரெலிபோன், செல்போன் இவற்றுக்கான கலைச் சொற்களை உங்களால் கூறமுடியுமா?

## கலைச்சொற்கள்

நாளுக்கு நாள் உலகின் வெவ்வேறு பகுதிகளில் பல்வேறு புதிய விடயங்கள் உருவாக்கப்படுகின்றன. அவை, மனிதர் பயன்படுத்தும் கருவிகளாக இருக்கலாம்; நுகர்வுப் பொருள்களாக இருக்கலாம்; விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வி தொடர்பான புதிய சிந்தனைகளாக இருக்கலாம். இத்துறைகள் சார்ந்து எழுதும் போது புதிய சொற்கள் தேவைப்படுகின்றன. இவ்வாறு குறிப்பிட்ட துறையோடு தொடர்புடைய புதிய சொற்களை அவ்வாறே எழுதுவதைத் தவிர்த்து அவற்றின் பொருள் சிதையாதவாறு தமிழில் புதிதாக எழுதப்படும் சொற்களை கலைச்சொற்கள் என்கிறார்கள். இவை ஒரு துறைசார்ந்த விடயங்களைச் சுருக்கமாகவும் துல்லியமாகவும் பரிமாறிக்கொள்வதற்குப் பயனுள்ளவையாக அமைகின்றன.

1983ஆம் ஆண்டிற்கு முன்னர் உலகத்தில் இணையம் (Internet) இருக்கவில்லை. அப்போது இணையம், மின்னஞ்சல், வலைத்தளம், நிகழ்நிலை, முகநூல் போன்ற இணையத்துடன் தொடர்புடைய கலைச்சொற்கள் தேவைப்படவில்லை. ஆனால், புதிய விடயங்கள் அறிமுகமாகும் போது இத்தகைய கலைச்சொற்கள் தேவைப்படுகின்றன.

கலைச்சொற்கள் உருவாக்கப்படுகின்ற போது அவை தமிழில் ஏற்கனவே உள்ள சொற்களைக் கொண்டே உருவாக்கப்படுகின்றன. ஆனால், நேரடியாக அவற்றின் பொருளை எடுத்துக்கொள்ள முடியாது. உரிய விடயத்தோடு தொடர்பு படுத்தியே விளங்கிக்கொள்ள வேண்டும். உதாரணமாக, மென்பொருள் எனும் சொல் கணினியோடு தொடர்புடையது. அது மென்மையான பொருள் என்ற கருத்தைத் தருவதில்லை என்பதை உணர்ந்துகொள்வது அவசியமாகும்.

## செயற்பாடு 2.5.1

- செயற்பாட்டின் தன்மைக்கேற்ப குழுக்களாகுவோம்.
- கீழே தரப்பட்டுள்ள பந்திகளில் ஒன்றினை வாசிப்போம்.
- அப்பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள நான்கு கலைச்சொற்களைத் தெரிவுசெய்வோம்.
- ஆசிரியர் ஆலோசனைக்கேற்ப நாம் கண்டறிந்த கலைச்சொற்களை வகுப்பில் முன்வைப்போம்.

**பந்தி - 1**

மீண்டும் கொரோனா பெருந்தொற்று வேகமாகப் பரவுவதாக மீடியாக்களில் செய்திகள் வெளிவருகின்றன. மக்கள் பொது இடங்களில் நடமாடும் போது மாஸ்க் அணிவது மிகவும் பாதுகாப்பானது என அச்செய்திகளில் வலியுறுத்தப்படுகின்றன. அதே போன்று பலர் ஒன்று கூடுகின்ற அலுவலகங்கள், கடைகள், மண்டபங்கள் என்பவற்றினுள் நுழையும் போதும் வெளியில் சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பும் போதும் சனிற்றைசரைப் பயன்படுத்திக் கைகளைச் சுத்தம்செய்வது உகந்தது எனவும் கூறப்படுகின்றது.

**பந்தி - 2**

பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மாணவ தலைவர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. உதவி அதிபர் கூட்டத்தை நடத்தினார். அவர் ஸ்டேஜிற்குப் பின்னால் நின்று மைக்கைப் பயன்படுத்திப் பேசினார். அவர் பேசுவது மண்டபத்தின் பின்பகுதியிலிருந்த லவுட்ஸ் பீக்கரில் தெளிவாகவும் சத்தமாகவும் ஒலித்தது. உதவி அதிபர் பேசுவதற்கான குறிப்புகளை அவரின் ஸ்மார்ட் போனில் வைத்திருந்தார். பேசும் போது அவர் அதனைப் பார்த்துக்கொண்டார்.

## செயற்பாடு 2.5.2

- குழுக்களாக இணைந்துகொள்ளுவோம்.
- குழுநிலையில் கலந்துரையாடி, பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துவோம்.

| பந்தி | கலைச்சொல்லாக ஆக்கக்கூடிய சொற்கள் | கலைச்சொல் |
|---|---|---|
| 1 | | |
| | | |
| | | |
| | | |
| 2 | | |
| | | |
| | | |

- மேலே பட்டியலிட்ட கலைச்சொற்கள் ஒவ்வொன்றிற்கும் இவ்விரு வாக்கியங்களைக் குழுவில் கலந்துரையாடி எழுதுவோம்.
- நாம் எழுதிய வாக்கியங்களை ஆசிரியரிடம் முன்வைத்து, அவருடைய ஆலோசனைக்கு ஏற்ப அதனை முழு வகுப்பிற்கும் வாசித்துக்காட்டுவோம்.

## செயற்பாடு 2.5.3

- பின்வரும் கலைச்சொற்களைக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| 1. கணினி | 2. இணையம் | 3. மெய்ந்நிகர் வகுப்பு |
| 4. குறுஞ்செய்தி | 5. இறுவட்டு | 4. திறன்பேசி |

- வாக்கியங்களை எழுதும்போது பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்வோம்.
    - ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல்.
    - ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய்க்குப் பொருத்தமான பயனிலையைக் கொண்டிருத்தல்.
    - நிறுத்தக்குறிகள் பொருத்தமாகப் பயன்படுத்தப்படல்.

### மாணவர் சுய கணிப்பீடு

பொருத்தமான கட்டத்துள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. கலைச்சொற்கள்பற்றி அறிந்துகொண்டேன். | | | | |
| 2. ஆக்கங்களை வாசிக்கும் போது அதில் உள்ள கலைச் சொற்களை இனங்கண்டு கூறுவேன். | | | | |
| 3. கலைச் சொற்களுக்கான விளக்கங்களைப் பெற்று அவற்றைப் பயன்படுத்துவேன். | | | | |
| 4. கலைச்சொற்களைக் கொண்டு பொருத்தமான வாக்கியங்களை எழுதுவேன். | | | | |

# மொடியூல் 3

## இலக்கியச்சுவை

### கற்றல் சந்தர்ப்பங்கள்

### திருக்குறள்

இக்கற்றல் சந்தர்ப்பம், பழங்கால இலக்கியங்களுள் ஒன்றான திருவள்ளுவரைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் அறிவதுடன், திருக்குறளில் உள்ள அதிகாரங்களுள் ஒன்றான அன்புடைமை அதிகாரத்தைக் கற்கவும் துலங்கிச் செயற்படுவதற்குமான திறனையும் வழங்குகின்றது.

### கவிதை

இக்கற்றல் சந்தர்ப்பம், கவிதைகளை இரசனையுடன் கற்று அவற்றில் வெளிப்படுகின்ற கருத்து, உணர்ச்சி, கற்பனை, மையப்பொருள் முதலியவற்றை இனங்கண்டு கூறுவதற்கும் பொருத்தமான இடத்தில் பயன்படுத்துவற்குமான ஆற்றலை வழங்குகின்றது.

### நாட்டார்பாடல்

இக்கற்றல் சந்தர்ப்பம், பல்வேறு வகையான நாட்டார்பாடல்களையும் அவற்றின் பண்புகளையும் அறிந்து, கருத்துக்களைக் கூறுவதற்கும் அவற்றை இரசனையோடு வாசிப்பதற்கும் பாடுவதற்குமான ஆற்றலை வழங்குகின்றது.

### வரிக்குதிரையின் கதை

இக்கற்றல் சந்தர்ப்பம், கதையின் பண்புகளையும் பயன் களையும் அறிவதற்கும் கருத்துக்களை முன்வைப்பதற்குமான திறனை வழங்குகின்றது.

கற்றல் சந்தர்ப்பம் 1

# திருக்குறள்

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,

- திருவள்ளுவரைப்பற்றி அறிந்துகொள்ளவும்
- திருக்குறளைப்பற்றி அறிந்துகொள்ளவும்
- அன்புடைமை அதிகாரத்தின் கருப்பொருளினை விளங்கி முன்வைக்கவும்

உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

திருவள்ளுவரைப்பற்றி அறிந்துள்ளீர்களா?

- உங்களுக்குத் தெரிந்த திருக்குறள்பற்றிக் கூறமுடியுமா?
- திருக்குறளினை ஏதாவது ஊடகங்களில் கேட்டதுண்டா?
- அவ்வாறான ஊடகங்களைக் கூறமுடியுமா?
- திருக்குறள் தொடர்பான ஆக்கங்களை வாசித்துள்ளீர்களா?

### செயற்பாடு 3.1.1

- திருக்குறள் எனும் நூல்பற்றியும் அதன் ஆசிரியரான திருவள்ளுவர் பற்றியும் அறிந்துகொள்வோம்.

## திருக்குறளும் திருவள்ளுவரும்



திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பால்களால் ஆனது. அந்த முப்பால்களும் 133 அதிகாரம் கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துக் குறட்பாக்களால் அமைந்துள்ளது.

திருக்குறளில் எல்லாமாக 1330 குறட்பாக்கள் உள்ளன. இந்நூல் தமிழில் உள்ள அறநூல்களுள் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. இன மத பேதங்களுக்கு அப்பால் எல்லோருக்கும் பொருத்தமான அறங்களையே வலியுறுத்துவதால் அது உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகிறது. அத்தகு சிறப்புமிகு திருக்குறள் உலகில் உள்ள பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

- திருவள்ளுவரைப்பற்றித் தேடியறிந்து ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதுவோம்.

## செயற்பாடு 3.1.2

அன்புடைமை

அன்புடைமை என்பது, பிறர்மீது கருணையும் பற்றும் கொண்டு அவர்களுக்கு உதவும் மனப்பான்மையுடன் வாழ்வதாகும். இது மனித வாழ்வின் மிக முக்கியமான அறங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

திருக்குறளில் "அன்புடைமை" ஒரு தனி அதிகாரமாகவே (அதிகாரம் 8) விளக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அன்பின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

### அன்புடைமையின் முக்கிய அம்சங்கள் சில

1. அன்பின் வெளிப்பாடு
2. பிறர்நலம் நாடுதல்
3. நட்பை உருவாக்குதல்
4. வாழ்க்கைக்கு அடிப்படையாதல்
5. அறத்திற்கும் வீரத்திற்கும் துணையாதல்
6. உயிரின் நிலையறிதல்

அன்புடைமை என்ற அதிகாரத்தில் பத்துக் குறள்களையும் தனித்தனியேயும் பின்னர் சோடி சேர்ந்தும் வாசியுங்கள்.

## அன்புடைமை

1 அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

2 அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

3 அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆர்உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

4 அன்புஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.

5 அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

6 அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அ∴தே துணை.

7 என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம்.

8 அன்புஅகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த்து அற்று

9 புறத்து உறுப்புஎல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துஉறுப்பு அன்பு இலவர்க்கு.

10 அன்பின் வழியது உயிர்நிலை அ∴லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

## செயற்பாடு 3.1.3

அன்புடைமை என்ற அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களின் கருத்தினை மௌனமாக வாசிப்போம். அதன் பின்னர் சோடி சேர்ந்து, ஒருவர் குறளையும் மற்றவர் அதன் பொருளையும் வாசிப்போம்.

அதன் பின்னர் பத்துக் குறள்களையும் அவற்றிற்கான விளக்கத்தையும் வலுகுவி அளிக்கை (Power Point) மூலமாகக் குழுநிலையில் முன்வை-ப்போம்.

விளக்கம்




அன்புக்கு அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத் திவிடும்.




அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார், அன்பு உடையவர் தம் உடம்பாலும் பிறருக்கு உரியவர்.




உயிர்க்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.




அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும் அஃது எல்லாரிடத்தும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.



**5. அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு.**

உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.



**6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**

அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர். ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது.



**7. என்பு இலதனை வெயில்போலக் காயுமே**
**அன்பு இலதனை அறம்.**

எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல், அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.



**8. அன்புஅகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரம் தளிர்த்து அற்று**

அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழ்க்கை, வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.



**9. புறத்து உறுப்புஎல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துஉறுப்பு அன்பு இலவர்க்கு.**

உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்கள் எல்லாம் என்ன பயன் செய்யும்.



**10. அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும். அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல்போர்த்த வெற்றுடம்பே ஆகும்.

கீழ்வரும் படத்தை அவதானிப்போம். அன்புடைமை என்ற அதிகாரத்தை விளங்கி இப்படத்தோடு தொடர்புபடுத்தி ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதுவோம்.



## செயற்பாடு 3.1.4

- தனியாகவும் சோடியாகவும் இணைந்து பாவோதல் முறையில் குறள்களை ஓதிக்காட்டுவோம். பாவோதல், பதப்பிரிப்பு ஆகியன பற்றி அறிவதற்கு ஆசிரியரின் உதவியுடன் இணையத்தளத்தையும் பயன்படுத்துவோம்.

சொற்களஞ்சியம்

ஆர்வலர் - விருப்பமுடையோர் / ஈடுபாடு உள்ளோர்
பூசல் - பலரும் அறியச் செய்தல்
என்பு - எலும்பு
வையகம் - பூமி

**பாவோதல் முறை**

1. குறளைச் சொல்லுதல்
2. குறளைப் பதப்பிரிப்புச் செய்தல்
3. குறளின் பொருளைக் கூறுதல்
4. குறளை ஓதுதல்

### செயற்பாடு 3.1.5

- இதுவரை கற்றவற்றிலிருந்து ஐந்து பெயர்ச்சொற்களைத் தெரிவுசெய்து கொள்வோம்.
- அச்சொற்களுக்கு ஒத்தபொருள், எதிர்ப்பொருள் சொற்களை எழுதிக்கொள்வோம்.
- தேவை ஏற்படின் அகராதி அல்லது ஆசிரியரின் உதவியைப் பெற்றுக்கொள்வோம்.

### செயற்பாடு 3.1.6

- அன்புடைமை அதிகாரத்தில் கற்றுக்கொண்டவற்றிலிருந்து அன்பு பற்றிய எண்ணக்கருத்தை, வலுகுவி அளிக்கை (Power point) மூலம் முன்வைப்புச் செய்வோம்.
- உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதனால் ஏற்படும் உணர்வுகளை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வோம்.

மாணவர் சுய கணிப்பீடு

பொருத்தமான கட்டத்துள் ✓அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. திருவள்ளுவரைப்பற்றிக் கூறமுடியும். | | | | |
| 2. அன்புடைமை என்ற அதிகாரத்தில் வரும் விடயங்களைச் சுருக்கமாக முன்வைக்கமுடியும். | | | | |
| 3. தரப்படுகின்ற குறட்பாக்களை சந்திபிரித்து வாசிக்கமுடியும். | | | | |
| 4. பொருள் விளங்கும் வகையில் கொண்டுகூட்டி வாசிக்கமுடியும். | | | | |
| 5. அன்புடைமை என்ற அதிகாரத்தில் தரப்பட்ட குறட்பாக்களின் பொருளைச் சொந்த மொழிநடையில் எழுதமுடியும். | | | | |
| 6. குறட்பாக்களை இசையோடு பாடமுடியும். | | | | |
| 7. அன்புடைமை என்ற அதிகாரத்தில் சொல்லப்பட்ட விடயத்தைத் தொகுத்துக் கூறமுடியும். | | | | |
| 8. திருவள்ளுவர் கூறிய அன்பின் சிறப்பினை என்னால் மற்றையவர்களுக்குக் கூறமுடியும். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 2

# கவிதை

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,
- கவிதை பற்றி அறிந்துகொள்ளவும்
- அதன் பிரதான பொருளை இனங்காணவும்
- கற்பனை, உணர்ச்சி முதலானவற்றை உணர்ந்து வெளிப்படுத்தவும்
- சிறு கவிதையொன்றினை எழுதவும் உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

- நீங்கள் கவிதைபற்றி அறிந்துள்ளீர்களா?
- நீங்கள் வாசித்த கவிதை ஒன்றை நினைவுபடுத்திக்கூற முடியுமா?
- உங்களுக்குத் தெரிந்த கவிஞர் ஒருவரின் பெயரைக் கூறமுடியுமா?
- நீங்கள் வானொலியிலோ தொலைக்காட்சியிலோ கவியரங்க நிகழ்ச்சிகளை கேட்டு அல்லது பார்த்திருக்கிறீர்களா?

கவிதை என்பது இலக்கிய வடிவங்களுள் ஒன்று. சுருக்கமும் செறிவும் ஓசையின்பமும் உடைய அவ் இலக்கிய வடிவம், மற்றவர் மனத்தில் பதியக்கூடிய வகையில் கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு மிகப் பொருத்தமான ஊடகமாக அமைகிறது. கவிதையின் சிறப்பு அது எடுத்துரைக்கும் விடயத்தின் உள்ளடக்கத்தில் மாத்திரமின்றி, அந்த விடயத்தை எடுத்துரைக்கும் முறைமையிலும் தங்கியுள்ளது. அதாவது எடுத்துரைக்கும் விடயம், அதற்கேற்ற மொழிநடைச் சொற்கள், ஓசை, உணர்ச்சி மற்றும் உவமை முதலான அணிகளில் அதன் சிறப்புத் தங்கியுள்ளது.

## செயற்பாடு 3.2.1

கவிதை ஒன்று கொண்டிருக்கவேண்டிய பண்புகளை எழுதுக.
இந்த வினாவுக்கான விடையை ஆசிரியரின் உதவியுடன் இணையம் மற்றும் நூலகம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பக்கப்புரட்டி / வலுகுவி அளிக்கை மூலமாக வகுப்பில் முன்வைப்போம்.

- எழுதிய விளக்கத்தைக் கீழே தரப்பட்டுள்ள விடயங்களுடன் ஒப்பிட்டுக் கொள்வோம்.

**செவ்வை பார்ப்புப் பட்டியல்**

- ஒரு விடயத்தைச் சுருக்கமாகவும் நுணுக்கங்களைத் தெளிவாகவும் காட்டவேண்டும்.
- கவிதை, ஆழமான விடயங்களைக் குறைந்த சொற்களில் தெளிவாகச் சொல்ல வேண்டும்.
- கவிதை எதைச் சொல்ல வருகிறதோ, அதை உறுதியாகச் சொல்ல வேண்டும், குழப்பக்கூடாது.
- உணர்வு, எண்ணம் முதலியவற்றை நுட்பமாகச் சொல்ல வேண்டும்.
- கேட்பதற்கு இனிமையாக இருக்கவேண்டும்.

## செயற்பாடு 3.2.2

கீழே தரப்பட்டுள்ள கவிதையை மௌனமாக வாசிப்போம். வாசித்த பின்னர் பின்வரும் வினாக்களுக்கு விடைகூறுவோம்.

- இந்தக் கவிதையை எழுதியவர் யார்?
- இந்தக் கவிதை யாரைப்பற்றிக் கூறுகின்றது?
- கவிதையில் கூறப்பட்டுள்ள விடயங்களைப் பட்டியற்படுத்துங்கள்.
- இக்கவிதையை எழுதிய கவிஞர்பற்றித் தேடியறிந்து வகுப்பில் முன்வையுங்கள்.
- கவிஞர் பற்றித் தேடியறியும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொள்ளுங்கள்.

1. கவிஞர் 2. கவிஞரின் ஆக்கங்கள் 3. கவிஞரின் சாதனைகள்



## கவிஞன்

கருணையே வடிவம் ஆவான்
கற்பனைச் சுரங்கம் ஆவான்
தருமமே போற்றிக் கொள்வான்
தகாதன ஏற்றுக் கொள்ளான்
வருவதே இடரென் றாலும்
வாய்மையே உரைத்து நிற்பான்
பெருமையே தருவ செய்வான்
பிழை செய்யான் பிழைத்தற்காக

தமிழுக்குத் தொண்டு செய்வோர்
தங்களைத் தொழுது நிற்பான்
தமிழுக்குக் கேடு சூழ்வோர்
தமைப்பகை ஆகக் கொள்வான்
இமிழ்திரை உலகில் எந்தப்
பகுதியில் இடர் நேர்ந்தாலும்
தமதுயிர் கொடுப்போர் ஆற்றல்
தான்மிகப் பாடி நிற்பான்.

திங்களின் அழகென் றாலும்
திகழ்மலர் அழகென் றாலும்
செங்கதிர் அழகென் றாலும்
செழும்புனல் அழகென் றாலும்
இங்கவை கவிதை என்னும்
எழிலுறு வடிவில் வைப்பான்
எங்குமே நன்மை வாழ
இதயத்தால் பாடல் செய்வான்.

புலவர் ம.பார்வதிநாதசிவம்

## செயற்பாடு 3.2.3

- கவிதையை நன்கு வாசித்து விடயங்களைப் பட்டியற்படுத்துவோம்.
- பட்டியற்படுத்தியதும் சோடி சேர்ந்து கலந்துரையாடி பட்டியலைச் சீர்படுத்துவோம்.
- அதன் பின்னர் சிறிய குழுக்களாக இணைந்து அப்பட்டியலில் விடுபட்டவற்றை சேர்த்தெழுதி முன்வைப்போம்.
- பட்டியலை மீளவும் சரிபார்த்துக் கொள்வதற்குக் கீழேயுள்ள அட்டவணையை அவதானிப்போம்.
- அட்டவணையில் உள்ள விடயங்கள் கவிதையில் குறிப்பிட்டிருப்பின் (+) அடையாளத்தையும் குறிப்பிடவில்லையெனின் (-) அடையாளத்தையும் இடுவோம்.
- இரண்டையும் மீண்டும் ஒப்பிட்டுச் சரிபார்த்துக்கொள்வோம்.

| **கவிஞனின் இயல்புகள்** | குறிப்பிடப்பட்டுள்ளன | குறிப்பிடப்படவில்லை |
|---|---|---|
| • இரக்கம் உள்ளவன். | | |
| • கற்பனை வளம் மிகுந்தவன். | | |
| • தர்மத்தைப் பேணுபவன். | | |
| • பிழையானவற்றை வெறுப்பவன். | | |
| • எந்த சந்தர்ப்பத்திலும் உண்மையைப் பேசுபவன். | | |
| • பெருமைக்குரிய விடயங்களையே செய்பவன். | | |
| • இலாபமீட்டுவதற்கான நிலை உருவானபோதும் பிழை செய்யமாட்டான். | | |
| • தமிழ்த் தொண்டு செய்பவர்களைப் பணிந்து வணங்குவான். | | |
| • தமிழுக்குக் கேடு நினைப்பவர்களைப் பகைவராகக் கருதுவான். | | |
| • உலகில் எந்தப் பகுதியிலும் துன்பப்பட நேர்ந்தவருக்கு உதவி செய்பவர்களைப் புகழ்ந்து பாடுவான். | | |
| • சந்திரன், பூக்கள், சூரியன், நீர் முதலான இயற்கைக் கூறுகளின் அழகைக் கவிதையில் அழகாக விபரிப்பான். | | |
| • எந்த இடத்திலும் நன்மை, நிலைபெறும்படி பாடல் இயற்றுவான். | | |

## செயற்பாடு 3.2.4

இக்கவிதையை எழுதியகவிஞர்பற்றிய தகவல்கள் சில இங்கு தரப்படுகின்றன. அவற்றோடு, மேலதிக தகவல்களை நூலகத்திலிருந்து அல்லது இணையத்தளத்திலிருந்து திரட்டிக்கொள்வோம்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | ம.பார்வதிநாதசிவம் |
| பிறப்பு | : | 14.01.1936 மாவிட்டபுரம் |
| ஆரம்பக் கல்வி | : | தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி |
| புலவர் பட்டம் | : | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் |
| கவிதை நூல்கள் | : | காதலும் கருணையும் இருவேறு உலகம், இன்னும் ஒரு திங்கள், இரண்டுவரம் வேண்டும், பசிப்பிணி மருத்துவன், மானங்காத்த மறக்குடி வேந்தன் |
| கட்டுரை தொகுப்பு | : | தமிழ்ச் செல்வம் |
| நூல் தொகுப்பு | : | இலுப்பை மரநிழலிலே |
| பத்திரிகைப்பணி | : | கலைமகள், ஈழநாடு, முரசொலி, உதயன் |
| பரிசு | : | "இருவேறு உலகம்" நூலிற்காக இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு |

## செயற்பாடு 3.2.5

- இக்கவிதையை எழுதிய கவிஞர்பற்றி, ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதுவோம்.
- எழுதிய பந்தியைச் சோடி சேர்ந்து வாசித்து, அதுபற்றிக் கலந்துரையாடித் திருத்தம் செய்துகொள்வோம்.
- பந்தி எழுதும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்வோம்.
    - கருத்துள்ள வாக்கியங்களாக இருத்தல்
    - எழுத்து வழுவின்மை
    - பொருத்தமான நிறுத்தக்குறிப் பிரயோகம்
    - வாக்கிய இயைபு
    - சொற்களைப் பொருத்தமாகச் சேர்த்தும் பிரித்தும் எழுதுதல்.

## செயற்பாடு 3.2.6

கவிதையின் கருப்பொருள் அல்லது மையக்கருத்து என்பது, குறித்த படைப்பின் மூலம் கவிஞர் வாசகருக்குச் சொல்ல முற்படுகின்ற பிரதான கருத்தாகும்.




- இங்கு தரப்பட்டுள்ள கவிதையின் மையக்கருத்தைப் புரிந்து கொள்வோம். கவிஞருக்கு இருக்கவேண்டிய பண்புபற்றி ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதி, வகுப்பறையில் வாசித்துக்காட்டுவோம்.
- மற்றவர்கள் கூறும் கருத்துக்களையும் செவிமடுத்து அதனையும் உள்வாங்கிக் கொள்வோம்.
(செயற்பாடுகளைப் பிரித்துக்காட்டுதல் சிறப்பாகும்.)

## செயற்பாடு 3.2.7

கீழ்வரும் சொற்களைப் பதம்பிரித்துக் காட்டுவோம்.

| | |
|---|---|
| கருணைவடிவம் | தமிழ்த்தொண்டு |
| தமதுயிர் | அழகென்றால் |
| செங்கதிர் | எழிலுறு |
| தொழுதுநிற்பான் | கற்பனைச்சுரங்கம் |
| திகழ்மலர் | செழும்புனல் |

## பதப்பிரிப்பு

| | | | |
|---|---|---|---|
| கருணைவடிவம் | கருணை | + | வடிவம் |
| தமிழ்த்தொண்டு | தமிழ் | + | தொண்டு |
| தமதுயிர் | தமது | + | உயிர் |
| அழகென்றால் | அழகு | + | என்றால் |
| செங்கதிர் | செம்மை | + | கதிர் |
| எழிலுறு | எழில் | + | உறு |
| தொழுதுநிற்பான் | தொழுது | + | நிற்பான் |
| கற்பனைச்சுரங்கம் | கற்பனை | + | சுரங்கம் |
| திகழ்மலர் | திகழ் | + | மலர் |
| செழும்புனல் | செழுமை | + | புனல் |

## மாணவர் சுய கணிப்பீடு

பொருத்தமான கட்டத்துள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. தரப்பட்ட கவிதையினை என்னால் இரசனையோடு வாசிக்கமுடியும். | | | | |
| 2. கவிதையின் மையக்கருத்தை என்னால் சரியாகக் கூறமுடியும். | | | | |
| 3. படைப்பாளி பற்றிய தகவல்களைத் திரட்டிக்கொள்ளமுடியும். | | | | |
| 4. சொற்களைச் சரியாகப் பதப்பிரிப்புச் செய்ய முடியும். | | | | |
| 5. படைப்பாளி பற்றி 50 சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதமுடியும். | | | | |
| 6. கவிதை ஒன்றைப் படைக்க முயற்சி செய்வேன். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 3

# நாட்டார்பாடல்கள்

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,
- நாட்டார்பாடல்கள்பற்றி அறிந்துகொள்ளவும்
- நாட்டார்பாடல்களின் பொருளை அறிந்துகொள்ளவும்
- நாட்டார்பாடல்களுக்கு சொந்த மொழிநடையில் பொருள் கூறவும்

உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

- நாட்டார்பாடல்கள்பற்றி அறிந்துள்ளீர்களா?
- நாட்டார்பாடல்களை வானொலி போன்ற ஊடகங்களில் கேட்டிருக்கின்றீர்களா?
- உங்களுக்குத் தெரிந்த நாட்டார்பாடல் ஒன்றைப் பாடிக்காட்ட முடியுமா?

நாட்டார்பாடல்கள் கிராமிய வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர் புடையவை. இதனை நாடோடிப்பாடல்கள், பாமரப்பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள் என்றும் அழைப்பர். கதைப்பாடல்களைத் தவிர மற்றைய பாடல்கள் நாட்டுப்புற வாழ்க்கையின் அன்றாட சம்பவங் களையே பொருளாகக் கொண்டவை. இதனாலேதான் வாழ்க்கையின் சாதாரண சம்பவங்களான பிறப்பு, குழந்தைப்பருவ நிகழ்ச்சி, விளையாட்டு, கிராமியத் தொழில்கள் முதலிய விடயங்களை இப்பாடல்கள் உட்பொருளாகக்கொண்டுள்ளன.

நாட்டார்பாடல்களில் பல வகைகள் உள்ளன. அவை தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், விவசாயப் பாடல்கள், மீனவப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள் முதலானவை. அவை பல்வேறு வகையான களங்களை அடிப் படையாகக் கொண்டு அமைகின்றன. இப்பாடல்கள், நிறைந்த பொருளும் ஓசைச் சிறப்பும் உடையனவாகக் காணப்படுவதோடு, அக்கால மக்களின் வாழ்வியலை வெளிக்கொண்டு வருவனவாகவும் அமைகின்றன.


## செயற்பாடு 3.3.1

### விளையாட்டுப்பாடல் - 1

இங்கே தரப்பட்டுள்ள பாடலை வாசிப்போம்.



**ஆலையிலே சோலையிலே**
**ஆலங்காடிச் சந்தையிலே**
**கிட்டிப் புள்ளும் பம்பரமும்**
**கிறுகியடிக்கப்**
**பாலாறு, பாலாறு, பாலாறு.......**




- இப்பாடல் எவ்வகையான பாடல் என இனங்காண முடிகிறதா?
- "ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே கிட்டிப்புள்ளும் பம்பரமும் கிறுகி அடிக்கப் பாலாறு" என்ற பாடல்வரிகளானது எப்பாரம்பரிய விளையாட்டைக் குறிக்கின்றது?
- விளையாட்டுப் பாடல்களைத் தரவிறக்கம் செய்து, அதனைப் பக்கப்புரட்டியில் எழுதி முன்வையுங்கள்.

## செயற்பாடு 3.3.2

- கீழே தரப்பட்டுள்ள விளையாட்டுப்பாடலை நண்பர்களுடன் சேர்ந்து, பாடிப் பாடி விளையாடுவோம்.

### விளையாட்டுப்பாடல் - 2



நீ எங்கே போனாய்
ஊருக்குப் போனேன்
என்ன ஊர்? மயிலாப்பூர்
என்ன மயில்? காட்டு மயில்
என்ன காடு? ஆற்றுக் காடு

என்ன ஆறு? பாலாறு
என்ன பால் - கள்ளிப்பால்
என்ன கள்ளி? இலைக்கள்ளி
என்ன இலை? வாழை இலை
என்ன வாழை? கற்பூர வாழை





கொத்திருக்கு கொத்து
என்ன கொத்து? மாங்கொத்து
என்ன மா? புளி மா
என்ன புளி? பழப் புளி
என்ன பழம்? வாழைப்பழம்
என்ன வாழை? கப்பல் வாழை
என்ன கப்பல்? பாய்க் கப்பல்
என்ன பாய்? ஓலைப் பாய்
என்ன ஓலை? பனை ஓலை
என்ன பனை? குளத்துப் பனை
என்ன குளம்? கிரான்குளம்

- இப்பாடலை வினாக்கேட்டு விளையாடுவோம்.
- விளையாடும்போது மனதில் தோன்றும் எண்ணங்களை முன்வைப்போம்.

சிறுவர்களும் விளையாட்டுப் பாடல்களும் என்ற தலைப்பில் 50 சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதுவோம்.

## தாலாட்டுப்பாடல்



இன்று உலகம் எத்தனையோ மாற்றங்களைக் கண்டிருக்கலாம். பலவகையான பாடல்கள் உருவாகியிருக்கலாம். ஆனால், குழந் தைப் பராயத்தில் தாய் பாடுகின்ற தாலாட்டுப் பாடலுக்கு நிகரான உணர்வை எதனாலும் தரமுடியாது. குழந்தையின் அழுகையை நிறுத்தவும் உறங்கச் செய்யவும் பாடப்படும் பாட்டு தாலாட்டுப் பாடலாகும். இப்பாடல்கள் இனிமையான இசையை உடையன. அந்த இசையில் மயங்கிய குழந்தைகள் மெய்ம் மறந்து உறங்குகின்றது.

‘தால்’ என்பது நாவைக் குறித்து நிற்கும் என்பர். நாவினால் ஓசை எழுப்பிக் குழந்தையை மடியிலோ தோளிலோ கைகளிலோ தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுவதே வழக்கம்.

செயற்பாடு 3.3.3

## தாலாட்டுப்பாடல்



**ஆராரோ ஆரிரரோ**
**ஆறு ரண்டும் காவேரி,**
**காவேரிக் கரையிலயும் !**
**காசி பதம் பெற்றவனே !**

**கண்ணே நீ கண்ணுறங்கு !**
**கண்மணியே நீ உறங்கு !**
**பச்சை இலுப்பை வெட்டி,**
**பவளக்கால் தொட்டிலிட்டு,**

**பவளக்கால் தொட்டிலிலே**
**பாலகனே நீ உறங்கு !**
**நானாட்ட நீதூங்கு !**
**நாகமரம் தேரோட !**
**தேரு திரும்பி வர !**
**தேவரெல்லாம் கைகொடுக்க !**
**வண்டி திரும்பி வர !**
**வந்த பெண்கள் பந்தாட !**

**வாழப் பழ மேனி !**
**வைகாசி மாங்கனியே !**
**கொய்யாப் பழ மேனி!- நான் பெத்த**
**கொஞ்சி வரும் ரஞ்சிதமே !**
**சித்திரப் பூ தொட்டிலிலே**
**சீராளா நீதூங்கு !**
**ஆராரோ ஆரிரரோ**
**கண்ணே நீ கண்ணுறங்கு !**

இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து தாலாட்டுப் பாடலைப் பாடுவோம்.

“தாலாட்டுப்பாடலும் அம்மாவும்” என்ற தலைப்பில் 50 சொற்களுக்குக் குறையாது பந்தி ஒன்றை எழுதுவோம். அந்தப் பந்தியை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வோம்.

- எழுதிய பந்தியைப் பக்கப்புரட்டியினூடாக அல்லது வலுகுவி அளிக்கை (Power Point) மூலமாக முன்வைப்போம்.

## செயற்பாடு 3.3.4

இணையம் மற்றும் நூலகத்தைப் பயன்படுத்தி விளையாட்டுப் பாடல்கள் தாலாட்டுப் பாடல்கள் ஆகியவற்றைத் தேடியறிந்து, சிறிய நாட்டார்பாடல் புத்தகம் ஒன்றைக் குழுவாகத் தயாரித்து வகுப்பில் காட்சிப்படுத்துவோம்.

குறிப்பு:

புத்தகம் ஒன்றை உருவாக்கும்போது கவனிக்கவேண்டிய நுட்பங்களைத் தேடியறிந்து முன்வைப்போம்.

## செயற்பாடு 3.3.5

நீங்கள் தேடியறிந்து தயாரித்த நாட்டார்பாடல் புத்தகத்தில் உள்ள பாடல்களைக் குழுவாகச் சேர்ந்து பாடிக்காட்டுக / மேடையேற்றுக / ஒலி, ஒளிப்பதிவு செய்க.

### மாணவர் சுய கணிப்பீடு

பொருத்தமான கட்டத்துள் ✓ அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. நாட்டார்பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்வியலை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதை என்னால் கூறமுடியும். | | | | |
| 2. நாட்டார்பாடல்களில் கையாளப்படும் மொழிபற்றி என்னால் கூறமுடியும். | | | | |
| 3. நாட்டார்பாடல்களின் கருப்பொருளை விவரிக்க முடியும். | | | | |
| 4. நாட்டார்பாடலின் கருப்பொருளை எழுதமுடியும். | | | | |
| 5. தரப்படும் நாட்டார்பாடல்கள் தொடர்பாக வினவப்படும் வினாக்களுக்கு விடை எழுதமுடியும். | | | | |
| 6. நாட்டார்பாடல்களை வாசித்து இரசித்து, இரசித்தமைக்கான காரணங்களை எழுதமுடியும். | | | | |

கற்றல் சந்தர்ப்பம் 4

# வரிக்குதிரையின் கதை

இரண்டு மணித்தியாலம் முப்பது நிமிடம்

இக்கற்றல் சந்தர்ப்பத்தினூடாக,
- கதைபற்றி அறிந்துகொள்ளவும்
- கதையின் பண்புகளை இனங்காணவும்
- கதையில் வெளிப்படும் சமூக உணர்வுகளை அறிந்து முன்வைக்கவும் உங்களால் இயலும்.



## நினைவுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுவோம்

- நீங்கள் வாசித்த அல்லது கேட்ட கதைகளை நினைவுபடுத்திக் கூறமுடியுமா?
- நீங்கள் யாருக்காவது கதைகள் சொல்லியிருக்கிறீர்களா?
- நீங்கள் கதைகளை வாசித்திருக்கின்றீர்களா?
- எங்கு வாசித்திருக்கின்றீர்கள்?
- அக்கதைகளில் உள்ள விடயங்களைக் கூறமுடியுமா?
- உங்களால் ஒரு கதையினை உருவாக்கிக் கூறமுடியுமா?

கதைகளுக்கு நம்மிடையே பஞ்சமே இருந்ததில்லை. கதை என்றால் எந்த வயதினருக்கும் பிடித்துவிடும். ஒரு கதை சொல்கிறேன் என ஆரம்பித்தால் எந்த வயதினரும் கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். நம்முள் அத்தனை பிரியமான இடத்தைக் கதை எப்படியோ பிடித்துள்ளது. அது மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. கற்பனை வளத்தைத் தூண்டக்கூடியது, கதையைப் படித்த இரண்டு நிமிடத்தில் மறந்துபோய்விட்டால் அது கதையல்ல. ஒரு வாரம், ஒரு வருடம் கழித்து ஞாபகம் வைத்து மற்றவரிடம் மாற்றியோ, மாற்றாமலோ சொல்ல வைப்பது நல்ல கதைகளில் உள்ள பொதுவான அம்சமென்று கூறலாம்.

## செயற்பாடு 3.4.1

முதலில் கதைகளின் வகைகளைத் தெரிந்துகொள்வோம்.

### கதைகளின் வகைகள்

1. உண்மைக்கதைகள்
2. கட்டுக்கதைகள்
3. புராணக் கதைகள்

### உண்மைக் கதைகள்

பறவைகள், விலங்குகள், செடி, கொடிகள், வானம், பூமி, கோள்கள், இயற்கை அமைப்புகள், மனிதனின் உணவு, உடை, உறைவிடம், வாழ்க்கை நிலைகள் ஆகியவை தொடர்பான உண்மையான விடயங்களைக் கதையாக்கிக் கூறுவது உண்மைக் கதைகளாகும்.

### கட்டுக்கதைகள்

கட்டுக்கதைகள் என்பது இல்லாத ஒருவர், ஒரு பிராணி, காடு, இடம், ஊர், நாடு என்பதாகவும் அதில் நாம் பார்க்காத, கேட்டறியாத செயல்களையும் கொண்டதாக இருக்கும். அதேபோன்று உண்மைச் சம்பவத்தை பின்னணியாகக் கொண்ட கட்டுக்கதைகள் உள்ளன. இதில் கற்பனை, உருவகம், உவமானம் என அழகிய கவிதை நடை அமைந்திருக்கும்.

### புராணக் கதைகள்

புராணக் கதைகள் மாணவர் அறிந்திராத மிகத் தொலைவிலுள்ள இடங்களையும் சமயம் சார்ந்த புராணங்களைப் பின்னணியில் கொண்ட தாகவும், அக்கால அரசர்களுடன் தொடர்புடைய விடயங்களை விளக்கு வதாகவும் அமைந்துள்ளன. அன்பு, பாசம், பக்தி, நட்பு, வீரம், இரக்கம் பற்றிய பண்புகளையும் கோபம், பேராசை, பிறர்க்குத் தீங்கு விளை வித்தல், அதனால் ஏற்பட்ட அழிவுகளையும் கதைகள் சித்திரிக்கின்றன.

கதைகளின் வகைகளைச் சுருக்கமாக அறிந்துகொண்டீர்கள். கதைகளின் வகைகள் பற்றி இணையத்தின் அல்லது நூலகத்தின் உதவியுடன் தகவல்களைத் திரட்டி வலுகுவி அளிக்கை மூலம் முன்வைப்புச் செய்யுங்கள்.

## செயற்பாடு 3.4.2

இந்தக் கதையை மௌனமாக வாசிப்போம்.

### வரிக்குதிரையின் - கதை

“அம்மா, அம்மா, அந்தோ பாரம்மா. கழுதை மேலே கறுப்புக் கறுப்பாய்க் கோடு போட்டிருக்கு!” என்று ஒரு குரல் கேட்டது.

மிருகக் காட்சிசாலையில் வேலிக்குள் நின்றுகொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்த்தேன். சிறுவன் ஒருவனும் அவன் அம்மாவும் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

இது கழுதை இல்லையடா கண்ணு. உடம்பைப் பார். எப்படிப் பள பளப்பாக இருக்கிறது! இந்த மிருகக்காட்சிச் சாலையிலே புலிக்கு அடுத்ததாகக் காணப்படும் அழகான மிருகம் இதுதான். இதன் பெயர்தான் வரிக்குதிரை என்றாள் அம்மா.



உடனே அந்தப் பையன் வாய்விட்டுச் சிரித்தான். சிரித்துக் கொண்டே, வரிக்குதிரையா! இதற்கும் குதிரைக்கும் என்னம்மா சம்பந்தம்? அசல் கழுதை மாதிரியே இருக்கிறது. இது வரிக்குதிரை இல்லையம்மா. வரிக்கழுதை! இது தான் சரியான பெயர் என்றான். பையன் பேச்சைக் கேட்டு அம்மாவும் சிரித்தாள்.

எனக்கு கோபம் கோபமாக வந்தது. உடனே அந்தப் பையனுக்குச் சுடச் சுடப் பதில் கொடுக்க வேண்டும் போல் தோன்றியது. “நானா கழுதை? கழுதையைப் போல் நான் காகிதத்தைத் தின்கிறேனா? இல்லை கற்றாழையைத் தின்கிறேனா? வேண்டுமானால், இந்த மிருகக் காட்சிச்சாலையில் வேலை செய்கிறவர்களைக் கேட்டுப்பார். புல், பூண்டு, கரட், கோதுமைத் தவிடு இவைகளைத்தான் நான் தின்கிறேன்” என்று சொல்ல நினைத்தேன், ஆனாலும் சொல்லவில்லை. காரணம், அந்தப் பையன் சொன்னதிலும் ஓரளவு உண்மை இருப்பதால்தான்! ஒரு விதத்தில் நான் கழுதை இனத்தைச் சேர்ந்தவன்தானே?



சாப்பாட்டில் மட்டும்தானா? இன்னும் எத்தனையோ விஷயங்களில் எனக்கும் கழுதைக்கும் வேறுபாட்டைக் காணலாம். கழுதை நன்றாகப் பொதி சுமக்கும்; எஜமானுக்குப் பணிந்து நடக்கும். நான் கொஞ்சம் முரடன். என்னைப் பழக்குவது சுலபமல்ல. அடிமையாக வாழ்வது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.



இந்த மிருகக் காட்சிசாலைக்கு வருவதற்கு முன்பு, ஆபிரிக்காவில் ஒருவர் என்னைக் காட்டிலிருந்து பிடித்து வந்து வீட்டிலே வளர்த்தார். வண்டியிலே போட்டுப் பழக்கினார். நானும் குதிரையைப் போல நன்றாகத்தான் வண்டி இழுத்தேன். அவர் என்னைச் சில சமயங்களில் சாட்டையால் அடித்துத் தொந்தரவு செய்வார். எனக்குப் பொல்லாத கோபம் வந்து விடும். சமயம் பார்த்துப் பின்னங்காலால் அவருக்கு நல்ல உதை கொடுப்பேன். தீனி போடும்போது பல்லால் அவர் கையைக் கடித்து விடுவேன். என்தொந் தரவு பொறுக்கமாட்டாமல்தான் அவர் என்னை விற்றுவிட்டார்.

அபூர்வமான மிருகங்களெல்லாம் பிறக்கின்ற ஆபிரிக்காவில்தான் நானும் பிறந்தேன். அங்குள்ள காடுகளில்தான் என் இனத்தைக் காணலாம். ஆட்டு மந்தையைப் போல் கூட்டம் கூட்டமாக நாங்கள் காட்டிலே திரிவோம்.

சிங்கத்திற்கு எங்களை அடித்துச் சாப்பிடுவதிலே அபாரமான ஆசை. பாதாம் அல்வாவை நீங்கள் எவ்வளவு விருப்பமாகச் சாப்பிடுகிறீர்கள்? அவ்வளவு விருப்பமாக எங்கள் மாமிசத்தைச் சிங்கம் சாப்பிடும். கூட்டமாக நாங்கள் இருக்கும் போது சிங்கம் எங்களிடம் வருவதற்கு யோசிக்கும். தனியாக இருந்தால் ஆபத்துத்தான்!

ஒரு தடவை, நான் தனியாக மேய்ந்து கொண்டிருந்தேன். அப்போது பின்னால் யாரோ வருவது போல் தெரிந்தது. சிறு சத்தமாக இருந்தாலும் எனக்குத் தெரிந்துவிடும். அதற்காகத்தானே கடவுள் எனக்கு இவ்வளவு நீளமான காதுகளைக் கொடுத்திருக்கிறார்.

சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தேன். ஆ! ஆபத்து! ஆண் சிங்கம் ஒன்று என்னை நோக்கிப் பாயவந்தது. உடனே எடுத்தேன் ஓட்டம். மணிக்கு 40 மைல் வேகந்தான் என்னால் ஓட முடியும். ஓடினேன், ஓடினேன். சிங்கமும் விடவில்லை துரத்தியது. மிகவும் நெருங்கி வந்துவிட்டது. ஒரு வினாடி தாமதித்தாலும், ஆபத்து! மேலே பாய்ந்து பிடரியைப் பிடித்துக் கடித்து விடும்.

ஆனால், நானா அதற்கு இடம் கொடுப்பேன்? சிங்கம் நெருங்கி வந்ததும், பின் கால்களால் ஓங்கி ஓர் உதை கொடுத்தேன். சிங்கம் வலி தாங்காமல் அங்கேயே உட்கார்ந்து விட்டது. நான் நாலு கால் பாய்ச்சலில் ஓடி வந்துவிட்டேன்.

பிறந்து ஏழு எட்டு மாதம் ஆன பிறகுதான் நீங்களெல்லாம் நிற்கிறீர்கள். ஆனால், பிறந்த அன்றைக்கே என்னால் நிற்க முடிந்தது; ஓடக்கூட முடிந்தது. மனிதரைப் போல் என்னை இடுப்பிலே தூக்கி வைத்துக்கொள்ள என் அம்மாவால் முடியுமா? அல்லது, கங்காருவைப் போல் பைக்குளே வைத்துக் கொள்ளத்தான் முடியுமா? அதனால்தான் பிறந்தவுடனேயே ஓடக்கூடிய சக்தியை எங்களுக்கு ஆண்டவன் கொடுத்திருக்கிறார். சிங்கமோ, சிறுத்தையோ வந்தால் ஓட வேண்டுமல்லவா?

எங்களிலே சிறு குட்டிகள் ஒன்றுடன் ஒன்று சண்டை போடுவதுண்டு. மனிதர்கள் குஸ்திச் சண்டை போடுவது போல் அந்தக் காட்சி இருக்கும். ஆனால், இந்த குஸ்திச் சண்டையில் ஒருவரை ஒருவர் கடிக்கக்கூடாது என்ற சட்டம் எதுவும் இல்லை. அதனால், சில சமயம் ஒன்றை ஒன்று நன்றாகக் கடித்துவிடுவதும் உண்டு!

ஆபிரிக்காவில் சில பேராசைக்காரர்கள் இருக்கிறார்கள். எங்கள் இனத்தை வேட்டையாடி அவர்கள் நிறையச் சம்பாதிக்கிறார்கள். எங்களுடைய மாமிசம் மனிதருக்குப் பிடிக்காதாம். தோலையும் பதனிட முடியாதாம். ஆனாலும், எங்களுடைய கொழுப்பு இருக்கிறதே அதற்கு கிராக்கி அதிகம். கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள பூர்விகக் குடிகளுக்கு அது சிறந்த மருந்தாக உதவுகின்றது. சிறிய அளவு கொழுப்புக்கு அவர்கள் நிறையப் பணம் கொடுப்பார்கள். காசநோய்க்கு இது கை கண்ட மருந்தாம்!

உங்களைவிட இரண்டு மாதங்கள் அதிகமாகக் கர்ப்பத்தில் இருந்தவன் நான். அதற்காக இந்த உலகத்திலும் உங்களைவிட அதிக நாள் உயிரோடு இருக்க முடியுமா, என்ன? என் ஆயுள் காலமே இருபது ஆண்டுகள் தானே!

## பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்

1. வரிக்குதிரையின் பிறப்பிடம் எது?
2. இந்த மிருகக் காட்சிச்சாலையில் உள்ள அழகான மிருகங்கள் இரண்டின் பெயரைக் குறிப்பிடுங்கள்?
3. வரிக்குதிரை உண்ணும் உணவு வகைகள் எவை?
4. வரிக்குதிரைக்கு நீளமான காதுகள் இருப்பதற்கான காரணம் யாது?
5. வரிக்குதிரையின் கொழுப்பு எந்த நோய்க்கு மருந்தாக அமைகிறது?
6. சிறுவன் வரிக்கழுதை எனக் கூறியதற்கான காரணம் யாது?

### செயற்பாடு 3.4.3

- இக்கதையில் உங்களைக் கவர்ந்த உரையாடல் வரிகள் ஐந்தினை எழுதுங்கள்.

எடுத்துக்காட்டு:

“வரிக்குதிரையா! இதற்கும் குதிரைக்கும் என்னம்மா சம்மந்தம்? அசல் கழுதை மாதிரியே இருக்கிறது. இது வரிக்குதிரை இல்லையம்மா. வரிக்கழுதை! இது தான் சரியான பெயர்” என்றான்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| தீனி | - சாப்பாடு / உணவு |
| அபூர்வம் | - புதுமை |
| குஸ்திச் சண்டை | - குத்துச்சண்டை |
| பேராசை | - அளவுகடந்த ஆசை |
| கிராக்கி | - கேள்வி |

## செயற்பாடு 3.4.4

- இக்கதையை வாசிக்கும் போது உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை, சொந்த மொழிநடையில் 50 சொற்களுக்குக் குறையாமல் பந்தியாக எழுதுவோம்.
- அதன் பின்னர் குழுவில் முன்வைத்துக் கலந்துரையாடிப் பந்தியில் திருத்தங்களை மேற்கொள்வோம்.

## செயற்பாடு 3.4.5

இக்கதையை எழுதிய படைப்பாளிபற்றி முக்கியமான சில குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வாசிப்போம்.

### அழ. வள்ளியப்பா குறிப்பு

அழ. வள்ளியப்பா, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922ஆம் ஆண்டு அழகப்ப செட்டியார், உமையாள் ஆச்சி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பெற்றோர் இவருக்குச் சூட்டிய பெயர் வள்ளியப்பன்.

தொடர்ந்து படிக்க முடியாததால், 1940ஆம் ஆண்டில் வாழ்வாதாரம் தேடி வை. கோவிந்தனின் சென்னை சக்தி பத்திரிகை அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தார்.

குழந்தை எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி, 1950இல் குழந்தை எழுத்தாளர்கள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். சக்தி வை.கோவிந்தன் இச் சங்கத்தின் முதல் தலைவராக இருந்தார். அவரைத் தொடர்ந்து வள்ளியப்பா இந்த அமைப்பின் காரியதரிசியாகவும் தலைவராகவும் வழிகாட்டியாகவும் பல பொறுப்புகளை ஏற்றுச் செயற்பட்டார்.

அழ.வள்ளியப்பாவின் 23 பாடல்கள் கொண்ட முதல் கவிதைத் தொகுதி “மலரும் உள்ளம்” எனும் பெயரில், 1944ஆம் ஆண்டு வெளிவந்தது. “சிரிக்கும் பூக்கள்” என்ற தொகுதியை வெளியிட்ட பிறகுதான், “குழந்தைக் கவிஞர்” என்ற பெயரிட்டு அனைவரும் அவரை அழைக்கத் தொடங்கிமை குறிப்பிடத்தக்கது.

குழந்தை இலக்கிய முன்னோடி, பிள்ளைக் கவியரசு, மழலைக் கவிச் செம்மல் என்று அவரை சில அமைப்புகள் பாராட்டிப் போற்றியுள்ளன. 1982இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினால் “தமிழ்ப் பேரவைச் செம்மல்” என்று விருதளிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டார்.

## செயற்பாடு 3.4.6

- படைப்பாளிபற்றி ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதுவோம்.
- அப்பந்தியை எழுதிய பின்னர் குழுவில் முன்வைப்போம்.
- அதனை வகுப்பில் முன்வைத்து ஆக்கபூர்வமாகக் கலந்துரையாடுவோம்.
- பின்னர் அப்பந்தியில் திருத்தங்களை மேற்கொள்வோம்.
- திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் வலுகுவி அளிக்கை மூலம் முன்வைப்போம்.

**மாணவர் சுய கணிப்பீடு**

பொருத்தமான கட்டத்துள் ✓அடையாளம் இடுவோம்.

| செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|
| 1. ஒரு கதையின் மையக் கருத்தை என்னால் கூறமுடியும். | | | | |
| 2. படைப்பாளியைப் பற்றிய தகவல்களைத் திரட்டி என்னால் கூறமுடியும். | | | | |
| 3. தரப்பட்ட கதை ஒன்றை என்னால் இரசனையோடு மற்றவர்களுக்குக் கூறமுடியும். | | | | |
| 4. கதை ஒன்றின் பண்புகளை என்னால் கூறமுடியும். | | | | |
| 5. படைப்பாளியைப் பற்றி என்னால் 50 சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதமுடியும். | | | | |
| 6. கதை ஒன்றை ஆக்கமுடியும். | | | | |